# 108 திவ்யதேசப் பாடல்கள்



வரத்திருமகள்

# 108 திவ்ய தேசங்களின் தல வரலாறு பாடல் வடிவில்

*இறைவனின் வரத்தில் வரத்திருமகள் வரைந்த எழுத்தோவியம்*

***ஓம் நமோ நாராயணா!***

# தினம் ஒரு பாடல்

பொருளடக்கம்


மூலவர் – ஊர் பெயர் பக்கம்

1. நரநாராயணன் - பத்ரிநாத் 10
2. நரசிங்க பெருமாள் -ஜோஷிமட் 12
3. அத்புத நாராயணன் திரிகோடித்தனம் 14
4. வைகுண்ட நாதர் - திருநாங்கூர் 16
5. லக்ஷ்மி நரசிம்மர்-திருவாலிதிருநகரி 17
6. த்ரிவிக்ரமன் - திருக்கோவிலூர் 18
7. லோகநாத பெருமாள் -திருவாரூர் 20
8. ஸ்ரீ ஸ்ரீனிவாசன் -திருவெள்ளக்குளம் 21
9. திருவண் புருஷோத்தமன் திருநாங்கூர் 23
10. குடமாடு கூத்தன் - திருஅரிமேய விண்ணகரம் 25
11. உலகளந்த பெருமாள் – காஞ்சிபுரம் 27
12. அஷ்ட புஜ பெருமாள்- காஞ்சிபுரம் 29
13. சொன்ன வண்ணம் செய்த பெருமாள் திருவெஃ கா 31
14. வரதராஜ பெருமாள் -காஞ்சிபுரம் 34
15. யோக நரசிம்மசுவாமி - வேலூர் 36
16. பால சயனக் கோலம்- சிறுபுலியூர் 38
17. தேவாதி ராஜ பெருமாள்-தேரழுந்தூர் 40
18. நீலமேக பெருமாள் -திருத்தஞ்சை மணிக்கோவில் 42

19. பக்தவத்சல பெருமாள்-
திருக்கண்ணமங்கை 44
20. தல சயன பெருமாள் – மாமல்லபுரம் 46
21. திரு சாரநாத பெருமாள் - திருச்சேறை 48
22. உப்பிலியப்பன் - கும்பகோணம் 49
23. வையம் காத்த பெருமாள்-
திருக்கூடலூர் 50
24. ஜெகன்னாத பெருமாள் –
கும்பகோணம் 51
25. கஜேந்திர வரத பெருமாள்-
திருக்கண்டியூர் 52
26. வல்வில் ராமன் -திருப்புள்ளம் 53
27. சாரங்கபாணி -கும்பகோணம் 54
28. ஆண்டளக்கும் ஐயன் - திருஆதனூர் 56
29. கோலவில்லி ராமர் –
திரு வெள்ளியங்குடி 58
30. நித்திய கல்யாண பெருமாள்-
சென்னை 60
31. ஹர சாப விமோசன பெருமாள்-
திருக்கண்டியூர் 61
32. அப்பக்குடத்தான்- தஞ்சாவூர் 62
33. அன்பில் சுந்தரராஜ பெருமாள்
- திருச்சி 63
34. புண்டரீகாட்சன் - திருச்சி 65
35. புருஷோத்தமன் -திருச்சி 66
36. ரங்கநாதர்- திருவரங்கம் 67
37. பக்த வத்சல பெருமாள்- திருநின்றவூர் 69
38. வீர ராகவ பெருமாள்- திருவள்ளூர் 70
39. விஜய ராகவ பெருமாள்- காஞ்சிபுரம் 71
40. நீர் வண்ண பெருமாள் -திருநீர் மலை 72
41. விளக்கொளி பெருமாள்- தூப்புல் 73
42. அழகிய சிங்க பெருமாள்-
திருவேளுக்கை 74
43. ஆதி வராக பெருமாள்- காஞ்சிபுரம் 76

44. நிலா துண்ட பெருமாள்- காஞ்சிபுரம் 83
45. பாண்டவ தூத பெருமாள் -காஞ்சிபுரம் 84
46. பவள வண்ண பெருமாள்-காஞ்சிபுரம் 86
47. பரமபத நாதர் - காஞ்சிபுரம் 88
48. கருணாகர பெருமாள்- திருகாரகம் 90
49. பார்த்தசாரதி - சென்னை 91
50. பேரருளாளன் -நாகப்பட்டினம் 93
51. வரதராஜ பெருமாள்- நாகப்பட்டினம் 94
52. கோபாலகிருஷ்ணன் -காவளம்பாடி 95
53. பரிமள ரங்கநாதர்- மாயவரம் 96
54. கோவிந்தராஜ பெருமாள்- சிதம்பரம் 98
55. அழகிய மணவாளர் -உறையூர் 100
56. திருநறையூர் நம்பி – நாச்சியார் கோவில் 102
57. நாவாய் முகுந்தன் -திருநாவாய் 104
58. உய்யவந்த பெருமாள்- பாலக்காடு 105
59. நீலமேக பெருமாள்- திருக்கண்ணபுரம் 107
60. சவுந்தர ராஜ பெருமாள்- நாகப்பட்டினம் 109
61. நாண்மதியப் பெருமாள் – தலச்சங்காடு 110
62. திரிவிக்ரம நாராயணர் - சீர்காழி 111
63. தாமரைக் கண்ணன் -வைகுண்ட விண்ணகரம் 113
64. செங்கண் மால் ரங்கநாதர் - திருத்தெற்றியம்பலம் 115
65. தாமரையாள் கேள்வன்- பார்த்தன் பள்ளி 117
66. தேவநாத பெருமாள்- திருவகிந்திபுரம் 119
67. காட்கரையப்பன்- எர்ணாகுளம் 120
68. லெட்சுமண பெருமாள்- திருமூழிக்களம் 121

69. திருவாழ் மார்பன் - பந்தனம்திட்டா 123
70. இமையவரப்பர்-ஆலப்புழா 124
71. மாயப்பிரான்- திருப்புலியூர் 125
72. திருக்குறளப்பன்- பந்தனம் திட்டா 126
73. பாம்பணையப்பன் - ஆலப்புழா 127
74. அனந்த பத்மநாபர் -திருவனந்தபுரம் 128
75. ஆதிகேசவ பெருமாள்- கன்னியாகுமாரி 130
76. திருவாழ்மார்பன்- திருப்பதிசாரம் 132
77. அழகிய நம்பியார் – திருக்குறுங்குடி 133
78. தோத்தாத்ரி நாதன் – நாங்குனேரி 135
79. வைகுண்ட நாதர்- ஸ்ரீ வைகுண்டம் 136
80. விஜயாசனர்- நத்தம் தூத்துக்குடி 138
81. வைத்தமாநிதி பெருமாள்- திருக்கோளூர் 139
82. பூமி பாலகர் - திருப்புளியங்குடி 140
83. ஆதி நாதன் - ஆழ்வார் திருநகரி 141
84. மகர நெடுங்குழைக்காதர் – தூத்துக்குடி 143
85. வேங்கட வாணன் - பெருங்குளம் 145
86. ஸ்ரீனிவாஸன் தொலைவில்லி மங்கலம் 147
87. தெய்வ நாயகர் - திருத்தேவனார் கோவில் 148
88. அரவிந்த லோசனர் - தொலைவில்லி மங்கலம் 149
89. நின்ற நாராயணப் பெருமாள்- விருது நகர் 150
90. வடபத்ரசாயி -திருவில்லிபுத்தூர் 152
91. கூடலழகர் - மதுரை 153
92. கள்ளழகர் - திருமாலிருஞ்சோலை 155
93. காளமேக பெருமாள்- திருமோகூர் 156

94. சவுமிய நாராயணன்- சிவகங்கை 158
95. ஆதி ஜெகந்நாதர்- திருப்புல்லாணி 160
96. சத்திய மூர்த்தி - திருமயம் 161
97. ரகுநாயகன் - அயோத்தி 162
98. கோவர்த்தநேசன்- மதுரா 163
99. கிருஷ்ணன்- துவாரகா 164
100. பிரகாலத்தவரதன் – அஹோபிலம் 166
101. வெங்கடாஜலபதி – மேல் திருப்பதி 168
102. முக்திநாத் -நேபால் 170
103. நைமிசாரண்யம் – உத்திரபிரதேசம் 172
104. நவமோகன கிருஷ்ணா – ஆயர்பாடி 173
105. ரகுநாத் -ஜம்மு காஷ்மீர் 175
106. திருவல்லவாழ் திருவாழ்மார்பன்- எர்ணாகுளம் 177
107. நாராயணா - திருப்பாற்கடல் 179
108. மகாவிஷ்ணு – பரமபதம் வைகுண்டம் 184

# முன்னுரை

பசி எடுத்தால் உணவு உண்பது மானுட உணர்வு. எவ்வளவு உண்டாலும் அடங்காத பசி எடுத்தால் என்ன செய்வது? ஆன்மீகப் பசி எடுத்து விட்டால் அந்தப் பசியை எப்படி அடைப்பது? திகட்டாத உணவாய் தெய்வீக உணவை, உணர்வை உட்கொள்ள ஆரம்பித்தேன். ஜனவரி 1 2017 ஆம் நாள் தினம் ஒரு பாடல் கடவுளைப் பற்றி எழுதுவது என்று உறுதி கொண்டேன். முதல் பதினைந்து நாட்களுக்கு விநாயகர் முதல் ஆரம்பித்து ஒவ்வொரு தெய்வத்தைப் பற்றியும் கவிதையாய் வடிக்க ஆரம்பித்தேன். நான் எழுதினேன் என்று சொல்வதைக் காட்டிலும் என்னுள் இருக்கும் அந்த இறைவன் என்னை எழுத வைத்தான் என்பதே பொருந்தும். இலக்கின்றி சென்று கொண்டிருந்த என் இலக்கியப் பயணம் இந்த ஆன்மீகப் பாதையில் இறை இலக்கை நோக்கி சீராக போக ஆரம்பித்தது. மானுடரைப் பற்றியும், மனித உணர்வுகளை பற்றியும் இயற்கை வர்ணனை பற்றியும் பல பாடல்கள் எழுதி இருந்தாலும் நிறைவின்றி இருந்த இலக்கியப் பசி ஆன்மீகப் பசியாக மாறியதும் கடவுளே வந்து அதற்கு அமுது ஊட்டத் துவங்கினார். சம்பந்தருக்கு ஞானப் பால் ஊட்டியது போல், அருணகிரி நாதரின் நாவில் முருகர் தீண்டியது போல், அறிவில்லாமல் திரிந்த ஊமையை

சரஸ்வதி பாட வைத்தது போல் பசியுடன் அழுத இந்தப் பாவைக்கும் தினம் ஒரு பாடல் எழுதும் ஆவலைத் தூண்டி எழுத வார்த்தைகளையும், சந்தங்களையும், எதுகை மோனைகளையும் சரியான அளவில் உப்பும் உறைப்பும் கலந்து உணவாய் ஊட்டி வருகிறார். பதினைந்து நாட்களுக்குப் பிறகு எப்படி இன்னும் 350 நாட்களுக்கு எழுதுவேன் என்று யோசிக்கையில் 108 திவ்ய தேசங்களைப் பற்றியும் 276 பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் பற்றியும் எழுதச் சொன்னார். தினம் காலையில் எழுந்தால் இன்று என்ன சமைப்பது என்ற யோசனை வராத இல்லதரிசியும் உண்டோ? என்ன உணவு என்று தீர்மானம் செய்து விட்டால் பசி அதிகமாகிவிடுமே. அது போல் என்ன எழுதுவது என்று முடிவு செய்த பின் ஆன்மீகப் பசி கூடத் துவங்கியது.

108 திவ்ய தேசங்கள் பற்றிய தகவல்களை அமெரிக்காவில் இருந்தபடி எங்கு தேடுவேன் என்று யோசிக்கையில் வலைதளம் என்ற களஞ்சியத்தில் தினமலர் பத்திரிகையின் அட்டவணை கண்டேன். சுமார் 100 தலங்கள் பற்றி அந்த வலைதளத்தில் விரிவாக சொல்லப்பட்டிருந்தன. மற்ற தலங்களை வெவ்வேறு வலைதளத்தில் இருந்து படித்து எழுதியுள்ளேன். தல வரலாற்றை சுருக்கமாக கவிதை வடிவில் தந்துள்ளேன். ஒரு சில பாடல்கள் நாட்டுப்புறப் பாடல்

போலவும், ஒரு சில பாடல்கள் மரபுக்கவிதை போலவும் இருக்கும். குழந்தைக்கு பல்வேறு பெயர் வைத்து அழைப்பது போல் நம் பெருமானுக்கும் பல்வேறு பெயர்கள். ஒரு சில ஊர் பெயர்கள் வித்தியாசப்படலாம். இது ஆராய்ச்சி புத்தகம் அன்று.  ஆழ்வார்கள் மங்களாசாசனம் செய்ததாக சொல்லப்படும் 108 முக்கிய வைணவத் தலங்களை ஒரு சில வலைதளங்களின் உதவியோடு எனக்குத் தெரிந்த வரை இந்த பாமாலை கோத்துள்ளேன்.

இந்த பாடல்களையும் சிவஸ்தலங்களின் தல வரலாறு பாடல்களையும் aanmegappasi.blogspot.com/ என்ற வலைப் பூவில் காணலாம்.

சூடிக் கொடுத்த பூமாலை சூடிய மணவாளனே! இந்த பாவை பாடிய பாமாலையை அணிந்து கொள்வாயாக! இதில் இருக்கும் பிழைகளை பொறுத்துக் கொள்வாயாக! மேலும் மேலும் பாடும் பாக்கியம் தருவாயாக! உன்னையே அல்லும் பகலும் எண்ணும் பாக்கியம் தருவாயாக!

ஓம் நமோ நாராயணா!

வரத்திருமகள்

ஆகஸ்ட் 30 2017

## பத்ரிநாத்

108 திவ்ய தேசங்கள் -1

இமயத்து திருப்பிரிதி இதுவென்று கண்டு
நமக்களித்த பெரியாழ்வார் நற்பாசுரம் உண்டு
நாலாயிரப் பிரபந்தத்தில் நவின்ற கோவிலே
காலால் அளந்த காவியமான பெருமாளே

நரநாராயண வடிவமே! நந்தாநதி யோகமே
வரமாய் பெற்றாலே வைகுண்டம் தெரியுமே
சங்குடன் கையில் சக்கரம் ஏந்தியவனே
பொங்கும் அழகில் பூத்திடும் பத்மமே

புராண தெய்வமே புதுப்பொலிவு உருவமே
விராட புருஷனே விளையாட்டுக் கண்ணனே
பத்ரிநாத் நாராயணனே பரவசம் தருவாயே
உத்தம நாயகனே உண்மை தெய்வமே

ஆதியாகி அந்தமாகி அண்டம் நிறைந்தவனே

வேதியர் வணங்கிடும் விஷ்ணுவே! விமலனே!

ஓதியே உன்புகழை ஓயாது பாடுவேன்

சோதியாய் நீயும் சுடரொளி தருவாய்

மேற்கோள்

ஆழ்வார் பாசுரம்

ஓதியாயிரநாமங்கள் உணர்ந்தவர்க்கு* உறுதுயரடையாமல்*

ஏதமின்றி நின்றருளும் நம்பெருந்தகை* இருந்தநல் இமயத்து*

தாதுமல்கிய பிண்டிவிண்டு அலர்கின்ற* தழல்புரை எழில்நோக்கி*

பேதைவண்டுகள் எரியென வெருவரு* பிரிதிசென்றடை நெஞ்சே.

# ஜோஷிமட்

108 திவ்ய தேசங்கள் -2

பத்ரிக்கு சென்றிட பாதையாய் நிற்கும்

உத்தரவு தந்து உயர்வழி காட்டும்

ஆதிசங்கர் மடமே ஆலய மருந்தே

ஜோதியாய் இமயத்தில் ஜோஷிமட் கோவிலே

வாயிலாய் நமக்கு வழிகாட்டி பெரும்

கோயிலாய் நம்முள் கொலுவிருக்கும் தெய்வத்தை

உள்ளுக்குள் இருக்கும் உண்மை அத்வைதத்தை

தெள்ளத் தெளிவாய் தெரிந்திட வைக்கும்

நரனாய் பிறந்த நமக்குள்ளும் இருந்து

நரசிம்மமாய் மறைந்து நாடியவர்க் கருளி

குளிரிலும் பத்ரியை கும்பிட வைக்கும்

கலியிலும் நமக்கு கதியைக் காட்டும்

மலைகள் ஜெயவிஜய மகிமையைச் சொல்லும்

அலைகள் ஓயாது அடிமனதில் புரளும்

விலையில்லா பக்தியே வேராய் உரமிடும்

சிலையான விஷ்ணுவும் சிந்தையில் தெரியும்

வடநாட்டு திருப்பதியே பூவுலக வைகுண்டமே

தடங்கல் இல்லாது தாரணியின் கல்பவ்ருக்ஷமே

வழிபாட்டுத் தலமே வைராக்கிய ஏற்றமே

அழிவில்லா மார்க்கமே! அருமறை அனுபவமே!

*ஆழ்வார் பாசுரம்*

*மறங்கொளாளரியுருவெனவெருவர ஒருவனது அகல்மார்வம்*

*திறந்து வானவர் மணிமுடிபணிதர இருந்த நலிமயத்துள்*

*இறங்கி ஏனங்கள் வளைமருப்பிடந்திடக் கிடந்தருகெரிவிசும்*

*பிறங்கு மாமணியருவியொடிழிதரு* ***பிருதி****சென்றடை நெஞ்சே!*

*http://natarajar.blogspot.com/2012/01/17.html*

## திரிகோடித்தனம் -கேரளா

108 திவ்ய தேசங்கள் -3

திரிகோடித் தனத்து திருஅவதாரத் திருமாலே

அரிதாய் கிடைத்த அத்புத நாராயணனே

பக்தன் சகாதேவன் பாங்காய் வேண்டிட

அக்னியில் எழுந்தருளிய அத்புத நாராயணனே

புரியாத புதிராய் புவனத்தில் பூத்தவனே

அறியாத பக்தனையும் அரவணைக்கும் பெருமாளே

ருக்மாங்கதன் தோட்டத்து ரூபங்களாய் பூத்து

தக்க தருணத்தில் தலப்பெருமை காத்தவனே

சாகாவரம் பெற்ற சகலதேவரும் சக்தியிழக்க

ஏகாதசி விரதபலன் ஏழைப்பெண் அளித்தாளே

ஆகாதுபோன சக்திகள் அற்புதமாய் கிடைக்க

ஏகாதசி மகிமையை ஏற்றமாய் சொன்னவனே

எங்கும் நிறைந்து எதிலும் கலந்தவனே

பொங்கும் அருளைப் பொலிவாய் தருபவனே

தங்கு தடையின்றி தருமத்தை மறுபடிமறுபடி

இங்கும் அங்கும் எங்கும் காப்பவனே

பூணவேண்டி ஆண்டாள் பூமாலை சூட்டிட

காணவேண்டி மனங்கள் காத்து நிற்குமே

நம்மாழ்வார் பாசுரத்தில் நலமாய் பாடிட

இம்மைக்கும் மறுமைக்கும் ஈஸ்வரன் ஆனவனே

மேலும் விவரங்களுக்கு

https://en.wikipedia.org/wiki/Thrikodithanam_Mahavishnu_Temple

இத்தலத்தைப் பற்றி நம்மாழ்வார் பாடிய பாசுரங்கள்

http://prapatti.com/slokas/tamil/naalaayiram/nammaazvaar/elliyum.pdf

**திருநாங்கூர்**
108 திவ்ய தேசங்கள் - 4

திருநாங்கூர் தலத்து தெய்வத் திருமாலே
திருமுகம் கிழக்கே திருக்கோலத் திருமாலே
ஆதிசேடன் தலைமேல் அணிந்த திருமாலே
சேதிகேட்டு சிவனின் சினம்குறை திருமாலே

விழுந்திடும் கேசம் வீறுகொண்ட சிவனாக
எழுந்தருளி சிவனின் இதயம்குளிர வைத்தவனே
பதினோரு சிவனுருவம் பார்வதிக்காக ஆடிட
பதினோரு திருப்பதிகளில் பள்ளிகொண்ட பெருமாளே

ஆடும் சிவனின் ஆங்காரம் தணிந்திட
கேடும் விளையாது குலம் காத்தவனே
வைகுண்ட நாதராய் பூலோகம் வந்தவரே
வைகுண்ட விண்ணகரம் வைகறையில் தெரியுமே

திருமங்கை ஆழ்வார் திருப்பாசுரம் பத்தும்
திருமணிமாடத் திருக்கோயிலில் திருமாலையாய் சூட்டிட
கருடசேவைக் கோலம் கண்கவர் திருக்கோலம்
செருக்கடுத்து எந்தன் சிந்தையில் பூண்டிடுக!

https://www.templepurohit.com/hindu-temple/sri-vaigunta-nathan-perumal-templetamil-nadu/

## திருவாலி திருநகரி-லக்ஷ்மி நரசிம்மர்
108 திவ்ய தேசங்கள்-5

திருவாலி திருநகரி திருலக்ஷ்மி நரசிம்மரே
கருட சேவையில் காத்தருளும் தெய்வமே

தஞ்சாவூர் மண்ணில் தாயாருடன் அமர்ந்தவரே
அஞ்சிய அடியாருக்கு அருளிய ஆலிங்கனமே

உக்கிரம் குறைந்து உஷ்ணம் தணிய
பக்கத்தில் அமர்ந்த பத்மத்தின் நாயகனே

பதினோரு திருப்பதிகளில் பாங்காய் அமைந்தவரே
மதியினால் அறியமுடியா மாயஒளி விளக்கே

அரசருக்கும் முனிவருக்கும் அறிவை ஊட்டி
பூவரசக் குப்பத்தில் வாகை சூட்டியவரே

குமுதவல்லி நாச்சியாருடன் கும்பிட்ட ஆழ்வாருக்கு
அமுதவல்லி தாயாருடன் அமுதமான கருணையே

கொஞ்சும் அன்னையின் குளிர்ந்த பார்வையில்
பஞ்சநரசிம்ம ஷேத்ரத்தில் பளிங்காய் மின்னுபவரே

தஞ்சமென வந்தோரை தாங்கி அரவணைத்து
பஞ்சாய் கவலைகளை பறக்கச் செய்பவரே

http://kumbakonam-temples.blogspot.com/2011/05/sri-lakshmi-narasimhar-temple.html

## திருக்கோவிலூர் - த்ரிவிக்ரமன் - உலகளந்த பெருமாள்

108 திவ்ய தேசங்கள் -6

உலகை அளக்க ஒருகாலைத் தூக்கியவனே
குலத்தைக் காக்கும் கோபால பெருமாளே
தலத்தின் பெருமை த்ரிவிக்ரம உருவமே
வலக்கை சக்கரம் வையத்தைக் காக்குமே

இடக்கை சங்கு இடர்களை நீக்குமே
இடம் மாறி இக்கோவிலில் இரண்டுமே
தடம்மாறா வாழ்வில் தாலாட்டி நிற்குமே
திடமான நம்பிக்கை திலகமாய்
ஜொலிக்குமே

இருக்கஇடம் இல்லாது ஆழ்வார்கள் மூவர்
முறுவலுடன் உன்புகழை முத்தமிழில் பாட
பொய்கை ஆழ்வார் பூதத்தாழ்வார்
பேயாழ்வார்
மெய்யறிந்து உன்னை முழுதாய்க்
காண்பாரே

நடப்பதும் நாளில் நடக்காது போவதும்
கிடப்பதும் உடுப்பதும் கீர்த்தியைப்
பாடுவதும்
உண்பதும் உறங்குவதும் உடலால்
செய்வதும்
கண்கள் பார்ப்பதும் கால்தூக்கிய
உன்னாலே

ஐயம் இல்லாது அப்பனை நாம்கண்டுவிட
வையத்துள் வாழ்ந்திட வகைகளை கற்றிட
அள்ளஅள்ள உணரலாம் அத்வைத
அறிவைநம்
உள்ளத்தை அளப்பானே உலகளந்த
பெருமாள்!

**ஆழ்வார் பாசுரம்**

**வையம் தகளியா வார்கடலே**
**நெய்யாகவெய்ய கதிரோன் விளக்காக -**
**செய்யசுடர் ஆழியான் அடிக்கே சூட்டினேன்**
**சொல் மாலைஇடராழி நிங்குகவே**

**மேலும் விவரங்களுக்கு**

**https://www.templepurohit.com/hindu-temple/sri-thiruvikrama-swamy-templetamil-nadu/**

## லோகநாத பெருமாள் -திருவாரூர்

108 திவ்ய தேசங்கள் -7

உருகாத வெண்ணெய் உருவத்தில்
நின்றவனே
பெருகிடும் கருணை பேரானந்த பெருமையே

மகிழத்தில் கட்டிய மதுசூதன மகிழ்வே
அகிலம் காத்திடும் அற்புத விஷ்ணுவே

வசிஷ்டரின் தவத்தில் வையகம் வந்தவனே
உசிதமாய் உரலில் உறையும் தாமோதரனே

உள்ளத்தில் பக்தி உயர்வாய் கொண்டால்
அள்ளஅள்ள குறையாது ஆனந்தம் தருவாயே

வெள்ளமென அன்பை வேணுவில்
பொழிவாயே
கள்ளமில்லாது உலகை காத்து நிற்பாயே

திருவாரூர் தலத்தில் திருக்கோல
லோகநாதனே
அருளிய மந்திரம் அந்தமில்லா நிறைவே

குருவாய் முனிவருக்கு கோலாகலன்
வந்தாயே
பெருமாளாய் இங்கே பெரிதான சியாமளனே

https://www.templepurohit.com/hindu-temple/loganatha-perumal-templetamil-nadu/

## ஶ்ரீ ஶ்ரீனிவாசன் -திருவெள்ளக்குளம்

108 திவ்ய தேசங்கள் -8

தென்திருப்பதி என்று திருப்பெயர் கொண்டு
வெண்நிறக் குளத்தருகே வீற்றிருக்கும்
வேங்கடநாதனே!
கண்கொள்ளா அழகோடு காட்சி அளித்து
மண்ணில் தவமான மங்கை
அலர்மேலவளே

பதினோரு திருப்பதி பதினோரு விஷ்ணு
பதினோரு சிவனுக்காய் பதவிசாய்
எழுந்திட
அண்ணல் அவனே ஆகிய படியால்
பண்ணாயிரப் பாடல் பாடிதினம்
தொழுதாரே

மங்கை ஆழ்வார் மலரோடு அன்னத்தில்
இங்கே பவனி இனிதே வந்திட
கருட சேவையில் காத்தருளி பவனிக்க
வருடத்தில் தவறாது வந்திடும்
தைவிழாவே

மரணத்தை எண்ணி மன்னன் அஞ்சிட
மருத்துவ முனிவரை மன்றாடிக் கேட்டிட
ம்ருத்யுஞ்ச மந்திரம் மன்னருக்கு ஓதிட
கருத்துடன் சிவனை கண்கள்
தியானித்தனவே

ஹரனை வேண்டினால் ஹரியும் வந்திட

இறப்பை தள்ளி இங்கிவனைக் காத்திட
நாராயணன் அருளிய நல்லதொரு
திருத்தலத்தில்
மாறாது மாதவன் மண்ணினைக் காப்பாரே

முப்பது நாளும் முத்தான தமிழில்
தப்பாது செப்பிய தளிரான மாலை
வலையில் சிக்கிய வலைப்பூ மாலை
அலைபோல் ஓயாது அவனருளால்
வளரட்டும்!

**மேலும் விவரங்களுக்கு**
[https://www.templepurohit.com/hindu-temple/thiruvellakkulam-templetamil-nadu/](https://www.templepurohit.com/hindu-temple/thiruvellakkulam-templetamil-nadu/)

## திருவண் புருஷோத்தமன் - திருநாங்கூர்

108 திவ்ய தேசங்கள் -9

திருப்பாற் கடலின் தீர்த்தம் திகழ்ந்திட
திருமாலை குணமாக்க திருமூலிகை
சஞ்சீவியே
திருமகள் நாயகி திருவோடு
இணைந்தவனே
திருப்பதிகள் பதினொன்றில் திருத்தமாய்
நின்றவனே

நின்ற கோலத்தில் நிலைத்த புருஷனே
அன்றலர்ந்த தாமரை அழகு மணாளனே
திருமங்கை ஆழ்வாரின் திருப்பாசுர
உத்தமனே
கருத்தைக் கவர்ந்திடும் காருண்ய சீலனே

சீலனாம் இராமனை சிறப்பாகப்
பாடுவோமே
கோலமாய் அழகை கொண்ட
கோதண்டனே
மாலையாய் பாடிய மங்களாசன மூர்த்தியே
சோலையில் பூத்திட்ட சுந்தர விஷ்ணுவே

விஷ்ணுவின் உருவத்தில் வியந்திடும்
திருநாங்கூரே
கஷ்டங்கள் போக்கிடும் கருணை
வெள்ளமே
சிறப்பினை பெற்ற சீர்காழி தலமே

பிறப்பினை அறுத்து பேறும் தருமே

தருவாய் பாலினை தாயாய் மாறியே
வருவாய் அமுதளிக்க வண்புருஷ
உத்தமனாய்
பசியினைப் போக்க பாற்கடலை
அளித்தவனே
கசிந்து உருகும்இக் கவிதையின் திருவே

**மேலும் விவரங்களுக்கு**
https://www.templepurohit.com/hindu-temple/sri-van-purushothaman-templetamil-nadu/
http://www.findmytemple.com/ta/நாகப்பட்டினம்/t303-வன்-புருஷோத்தமன்,-திருநாங்கூர்

## குடமாடு கூத்தன் கோவில் - திருஅரிமேய விண்ணகரம்
108 திவ்ய தேசங்கள் - 10

குடையாய்த் தாங்கி கோவர்த்தனம்
காத்தவனே
விடையாய் கீதையை விவரித்த
கண்ணனே

அடையமுடியா அதிசய ஆனந்த உருவமே
தடைகளை அகற்றிடும் தாமோதரக்
கண்ணனே

குடத்தில் வெண்ணெய் குதித்தாடி
உண்பவனே
குடத்தில் அமுதை குணமாய்
மறைத்தவனே

இடையனாய் உதங்கருக்கு இனியமுது
ஈந்தவனே
மடைதிறந்த வெள்ளமாய் மாயங்கள்
செய்தவனே

அக்னி உஷ்ணத்தை அமுதால்
குறைத்தவனே
உக்கிர சிவனையும் உருக வைத்தவனே

பக்தரைக் காணப் பறந்தோடி வருபவனே
அக்கரை சேர்க்க அவதாரம் எடுப்பவனே

திருநாங்கூர் தேசத்தை திவ்யமாய்
ஆக்கியவனே
திருப்பதிகள் பதினொன்றிலும் திருஉருவம்
கொண்டவனே

திருஅரிமேய விண்ணகரத் திருமாலாய்
நின்றவனே
திருமங்கை ஆழ்வார் திருப்பாசுர
திருஉருவமே

**மேலும் விவரங்களுக்கு**

**http://temple.dinamalar.com/New.php?id=274**

## உலகளந்த பெருமாள் - காஞ்சிபுரம்

தினம் ஒரு பாடல்
108 திவ்ய தேசங்கள் -11

வலக்கால் ஊன்றி வானுயர தூக்கி
உலகை அளக்க உயர்ந்து நின்றவனே
சுலபத்தில் ஆணவம் சுருங்கிய மகாபலி
தலப்பெருமை அறிந்து தலைவணங்கி
நிற்போமே

கச்சியின் கோவிலில் கண்டிடும் அதிசயமே
உச்சிவரை இடக்கால் உயரே நின்றிடுமே
பச்சை மாமலை பவழவாய் செங்கண்
இச்சைகள் அகற்றி இச்சகம் காப்பவனே

திருநீரக திருஊரக திருகாரக
திருகார்வானமே
திருஉருவே திருமாலே திருமகள்
தலைவனே
உருவாய் வருவாய் உலகை அளப்பாய்
அருவாய் மறைவாய் ஆகாயம் நிறைப்பாய்

பாதாள உலகமும் பாதம் காட்டுமே
ஆதாரம் உன்னிடமே அடைக்கலம் ஆகுமே
காதால் கேட்டிட கண்ணால் கண்டிட
கோதாவும் பாடிட கோவிந்த நாதமே

ஜெகத்தை காத்திடவரும் ஜெகதீச
பெருமாளே

அகத்தினை தொட்டிடும் ஆலிலை
கண்ணனே
திருஊரக தலத்து திருவருள் திருமாலே
திருஊரக தலத்து திருக்கோவில்
திருமாலே

திருகாரக தலத்து திருமண் திருமாலே
திருகார்வன தலத்து திருதிவ்ய திருமாலே
நீரிலே காத்திட நீர்மீனான பெருமாளே
பாரிலே காத்திடும் பாற்கடல் பெருமாளே

வலதுகால் தூக்கி வளர்ந்துநின்ற
பெருமாளே
உலகத்தை அளந்து ஊரைக்காக்கும்
பெருமாளே
குலங்களை காத்திடும் குருவாயூர்
பெருமாளே
தலத்தில் நான்கு தலமான பெருமாளே

மேலும் விவரங்களுக்கு

http://temple.dinamalar.com/New.php?id=1076

## அஷ்ட புஜ பெருமாள்- ஆதிகேசவ பெருமாள்

காஞ்சிபுரம்
தினம் ஒரு பாடல்
108 திவ்ய தேசங்கள் -12

அட்டபுயக் கரம்கொண்டு அபயம் தருவாயே
எட்டாத முக்தியை எளிதில் தருவாயே
கட்டிய வீட்டைக் காத்து அருள்வாயே
தட்டாமல் யானைக்கும் தயாளம் காட்டுவாயே

அக்கரத்தில் சக்கரம்கத்தி அம்புடன் புஷ்பமே
இக்கரத்தில் சங்குகதை ஏந்தியவில்லுடன் கேடயமே
முக்காலம் உணர்ந்த முனிவருக்கும் மோட்சமே
மக்களைக் காக்க மங்களமான கோலமே

மகாசந்தன் யானையாகி மலரால் வழிபட
மகாவிஷ்ணுவே ஆதிமூலமாகி மனமிரங்கி வந்தாயே
யாகத்தை தடுத்திட யாராலும் முடியாதே
யோகத்தை அருளிய யாதர்குல மாணிக்கமே

அலமேல் மங்கையுடன் அஷ்டபுஜ ஆதிகேசவனே

தலப்பெருமை அறிந்து தாளடி பணிவோமே
வலம்வந்து உன்னை வணங்கி நிற்போமே
உளமகிழ்ந்து தினமும் உன்னருள்
பெறுவோமே

மேலும் விவரங்களுக்கு
http://temple.dinamalar.com/New.php?id=500

**சொன்ன வண்ணம் செய்த பெருமாள்**
**(யதோத்தகாரி பெருமாள்)**
**திருவெஃகா - காஞ்சிபுரம்**
தினம் ஒரு பாடல்
108- திவ்ய தேசங்கள் - 13

சொன்ன வண்ணம் செய்த பெருமாளே -
ஆழ்வார்
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

திருமழிசை ஆழ்வார் திருஅருட் பாலில்
உருவத்தில் இளமை உடனே பெற்றாளே
பதுமையை மன்னன் பாராட்டி மணந்து
இதுபோன்ற இளமை எனக்கும்தா
என்றானே

மன்னனுக் கிசைய மறுத்த ஆழ்வாரை
தன்நாடு கடந்து தாண்டச் சொன்னானே
தன்சீடர் தன்மக்கள் தன்பொருள் இதனுடன்
தன்பெருமாள் உன்னையும் தன்னோடு
அழைத்தாரே

மன்னனின் ஆணையில்திரு மழிசை
ஆழ்வார்கனி
கண்ணன் துணையோடு காலாற நடக்க
என்னோடு நீயும் எழுந்து
வாவென்றுசொல்ல
அண்ணலும் அன்று ஆழ்வாருடன்
சென்றீரே

சொன்ன வண்ணம் செய்த பெருமாளே-
ஆழ்வார்
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

தன்தவறு உணர்ந்து தாளடி பணிந்து
மன்னிப்பு கேட்டு மன்னன் வந்திட
தன்னோடு கனிகண்ணன் தானாக திரும்பிட
உன்பக்தன் பின்னாலே உளமாரச் சென்றீரே

சொன்ன வண்ணம் செய்த பெருமாளே-
ஆழ்வார்
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

கோபத்தில் சரஸ்வதி கொந்தளிக்கும்
வேகவதி
ஆபத்தை நீக்கவே ஆதிசேட வேகசேது
திருவெஃக நகருக்கு திரும்பி வந்தவனே
திருமாலாய் வந்திங்கு திரும்பிப்
படுத்தவனே

சொன்ன வண்ணம் செய்த பெருமாளே-
ஆழ்வார்
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

வலமிருந்து இடமான வைகுண்ட
பெருமாளே
தலத்தில் திசைமாறி தலையும்
வைத்தவனே
கோமள நாச்சியுடன் கோயில்
கொண்டவனே

தாமரை மணாளனே தளிர்மேனி வண்ணனே

சொன்ன வண்ணம் செய்த பெருமாளே - ஆழ்வார்
சொன்ன வண்ணம் செய்த பெருமாளே

திருமழிசை ஆழ்வார் பாசுரம்

*கனிகண்ணன் போகின்றான் காமருபூங்கச்சி*

*மணிவண்ணா நீ கிடக்கவேண்டா - துணிவுடைய*

*செந்நாப்புலவனும் போகின்றேன் நீயுமுன்றன்*

*பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்*

*கணிகண்ணன் போக்கொழிந்தான் காமருபூங்கச்சி*

*மணிவண்ணா நீ கிடக்கவேண்டும் - துணிவுடைய*

*செந்நாப்புலவனும் போக்கொழிந்தேன் நீயுமுன்றன்*

*பைந்நாகப் பாய்படுத்துக்கொள்.*

மேலும் விவரங்களுக்கு

https://www.templepurohit.com/hindu-temple/sri-yathothakaari-perumal-templetamil-nadu/

## வரதராஜ பெருமாள் -காஞ்சிபுரம்
தினம் ஒரு பாடல்
108 திவ்ய தேசங்கள்- 14

நான்முகன் யாகத்தை நலமாக்கிய
பெருமாளே
வான்வெளி படுத்த வரதராஜ பெருமாளே
நாற்பது ஆண்டுக்கொரு நற்கதி பெருமாளே
ஆர்ப்பாட்ட விழாவில் அத்திவரத
பெருமாளே

பிரம்மனின் அக்னியில் பிறந்த பெருமாளே
பிரம்மாண்ட கோவிலில் படுத்த
பெருமாளே
சூழும் உலகிற்கொரு சுதர்சன பெருமாளே
வீழும் பழிகளை விலக்கிடும் பெருமாளே

படிகளிரு பன்னிரண்டு பாதை பெருமாளே
அடிகளில் பாடிய ஆழ்வாரின் பெருமாளே
மலையாள நாச்சியார் மனம்கவர்
பெருமாளே
மலையேற காயத்ரி மந்திர பெருமாளே

சக்கரத் தாழ்வார் சந்நிதி பெருமாளே
அக்கரை ஆசார்ய ஆச்சர்ய பெருமாளே
ஒருவினாடி மறைந்து ஓங்கிடும்
பெருமாளே
கருட சேவையில் காத்திடும் பெருமாளே

தங்க பல்லியாய் தாங்கிடும் பெருமாளே
தங்க மழைபொழியும் தாயார் பெருமாளே

மங்காத ஆபரணம் மார்பிடை பெருமாளே
சங்கு சக்கரமுடன் சயனித்த பெருமாளே

வையம் கண்டிடும் வைகாசி பெருமாளே
ஐராவதம் தாங்கிடும்
அத்திகிரி பெருமாளே
பொய்யை அகற்றிடும் பொலிவான
பெருமாளே
மெய்யை உணர்த்த மேவிய பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=633

## யோக நரசிம்மசுவாமி திருக்கோயில்- வேலூர்

108 திவ்ய தேசங்கள்- 15

யோகத்தில் ஆழ்ந்த யோகியே போற்றி
யாகங்கள் காத்த யாதவனே போற்றி
மாயங்கள் செய்த மாதவனே போற்றி
காயங்கள் போக்கும் குணசீலா போற்றி

சிறுவன் பிரகலாதன் சொல்காத்தவனே
போற்றி
உருவத்தில் நரசிம்ம உக்கிரமே போற்றி
சப்தரிஷிகளுக்கும் காட்சியான சத்தியமே
போற்றி
அப்படியே யோகத்தில் ஆழ்ந்தவனே
போற்றி

தொட்டாச் சாரியரின் துணையே போற்றி
தட்டாது தரிசனம் தந்தவனே போற்றி
கடிகாசல மலையின் காவலே போற்றி
கடிகை நாழிகையில் கோலமே போற்றி

முக்தியை அளித்திடும் மூலவனே போற்றி
பக்தியில் காட்டிடும் பாதையே போற்றி
சக்கர சங்கோடு சந்நிதியே போற்றி
அக்கறை பலத்துடன் ஆஞ்சநேயா போற்றி

ஏறிய படிகளில் இரங்கிடுவாய் போற்றி
கோரிய வேண்டுதலுக்கு குழைந்திடுவாய்
போற்றி

முனிவருக்கு பிரம்மரிஷி முனைந்தவனே
போற்றி
மனிதனுள் சிம்மமாய் மாறியவனே
போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=542

## சிறுபுலியூர்
## பால சயன கோலம்

108 திவ்ய தேசங்கள் 16

ஆதிசேடன் மடியினில் அனந்த சயனனே
தாலேலோ
ஓதிய மறைகளில் ஒய்யார சயனமே
தாலேலோ
பால சயனக் கோலத்தில் படுத்தவனே
தாலேலோ
காலத்தால் அழியாத கருடசேவை
பெருமாளே தாலேலோ

அகந்தை அழித்த அரங்க சயனனே
தாலேலோ
அகத்தினை திறந்து அமர்ந்த அண்ணலே
தாலேலோ
இகபர சுகத்தினை இவ்வுலகில்
அளிப்பவனே தாலேலோ
சுகமான பேரின்பம் சுகித்திட தருபவனே
தாலேலோ

அவனியைக் காத்த அலுப்பில் படுத்தவனே
தாலேலோ
சிவனின் சொல்லால் சேவித்த பாலகனே
தாலேலோ
புலிக்கால் முனிவருக்கு புரிந்த
அருளோனே தாலேலோ

கலியுலகம் வந்ததென்று களைத்து
போனாயோ தாலேலோ

திருவனந்தபுர இடவலமான தீர்க்க
பெருமாளே தாலேலோ
திருக்கண்ண மங்கையில் திடமான
கீழ்மேலானவனே தாலேலோ
திருஅரங்கத்தில் படுத்த திருக்கோல
நாயகனே தாலேலோ
சிறுபுலியூரில் சிந்தைகவர் சின்ன
பாலகனே தாலேலோ

## தேவாதி ராஜ பெருமாள்
## தேரழுந்தூர்
108 திவ்ய தேசங்கள் 17

பல்லாண்டு பல்லாண்டு பல்லாண்டு
வாழியே
அல்லும் பகலும் அலுப்பின்றி காப்பாய்
வாழியே

தேவாதிதேவ ராஜாதிராஜ தேவனே
வாழியே
பாவாய் ஆண்டாள் பாடிய அரங்கனே
வாழியே

பத்தடிஉயர கம்பீர பரமனே வாழியே
சித்திர அழகில் சிந்தை கவர்பவனே
வாழியே

அருகிலே பிரகலாதன் அண்டையில்
மார்கண்டேயன் வாழியே
கருடனின் அருகில் கதையுடன் நின்றவனே
வாழியே

காலிலே காவேரி கடிமலராய் வணங்கிட
வாழியே
ஆலிலை கண்ணனே ஆங்கேஉயர்
விஸ்வமே வாழியே

அழுந்திய தேரினை அசைத்த ஆண்டவனே
வாழியே

கொழுந்தாய் பசுக்களை கோகுலத்தில்
காத்தவனே வாழியே

அரிதிலும் அரிதான அரிநாரயண வடிவமே
வாழியே
கரிகால் வளவனின் காலத்து தலமே
வாழியே

கம்பன்பிறந்த கடிமணல் காவேரி கரை
வாழியே
செங்கமல வல்லியுடன் சேர்ந்த திருமாலே
வாழி வாழியே!

## திருத்தஞ்சை மாமணிக்கோவில் மூன்று தலங்கள் - நீலமேக பெருமாள் / வீர நரசிம்ம பெருமாள் / மணிக்குன்றர்

108 திவ்ய தேசங்கள்- 18

அஞ்சலென்ற பராசரருக் கருளிய அரியே
தஞ்சகனை அழித்த தாமரை அரியே
கெஞ்சிய கஜமுகனை திருத்திய அரியே
தஞ்சம் அளித்த தஞ்சாவூர் அரியே

தண்டகனை வராகமாய் அழித்த அரியே
அண்டம் பாதாளம் அதனுள்பாய்ந்த அரியே
தாடகனை அழித்த தாண்டவ அரியே
பாடலில் ஆடிவிடும் பாலக அரியே

வெண்ணாற்றுக் கரையில் வீற்றிருக்கும்
அரியே
மண்ணிலே ஒளிரும் மணிக்குன்ற அரியே
நிலத்தில் கமழும் நீலமேக அரியே
தலத்தில் திகழும்வீர நரசிம்ம அரியே

மூன்று கோவிலிலும் முகுந்த அரியே
சான்றாய் அமைந்த சாத்திர அரியே
அறிய முடியாத அளவில்லா அரியே
அரிதான மாயையின் ஆக்கமான அரியே

அடிமுதல் முடிவரை அளக்கமுடியா
அரியே
மடிமேல் பிளந்த மகாநரசிம்ம அரியே

கொடியாய் செங்கமல கோதையுடை
அரியே
வடிவாய் அம்புஜ வல்லியின் அரியே

https://www.templepurohit.com/hindu-temple/sri-neelamega-perumal-templetamil-nadu/

## பக்தவத்சல பெருமாள் - திருக்கண்ண மங்கை

108 திவ்ய தேசங்கள்-19

புண்ணியம் ஏழு புவியில் பெற்றதலமே
மண்ணிலே மங்கையை மணந்த தலமே

பாற்கடல் பள்ளிகொண்ட பரந்தாமன் தலமே
கார்முகில் வண்ணன் கண்ணன் மங்களதலமே

சந்திரன் பெற்ற சாபம் தீர்த்ததலமே
மந்திர தீர்த்தம் மகாலக்ஷ்மி அபிஷேகமே

சித்திரா பௌர்ணமியில் சிந்தைகவர் திருவிழாவே
சித்தம் குளிர்ந்து சிங்காரம் பொங்குமே

பத்திரமாய் காக்கும் பக்தரை பத்தராவியே
பத்திரமாய் கூடாகும் பணிவான தேனிக்களே

பண்ணிலே வந்திடும் பக்தவத்சல பெருமாளே
கண்ணிலே கருத்திலே கலந்திடு பெருமாளே

திருமகளை திருவாரூரில் திருமணம்செய் திருமாலே
திருக்கண்ண திருத்தலத்தில் திகழும் திருமாலே

http://temple.dinamalar.com/New.php?id=335

**தல சயன பெருமாள்**
**மாமல்லபுரம்**
108 திவ்ய தேசங்கள் -20

பள்ளி கொண்ட நாராயணா பாற்கடல்
பரந்தாமா
அள்ளிவிட முடியாத ஆழ்கடல் அனந்த
சயனா
புண்டரீக மகரிஷி பூக்களை சுமந்த
பத்மநாபா
அண்டம் காத்த அச்சுதா கேசவா மதுசூதனா

பன்னிரண்டு நாமங்கள் பாசுரத்தில்
ஆழ்வார் பாடிட
மன்னுபுகழ் நாலாயிரம் மகிழ்வோடு
உன்புகழ் சொல்லிட
தென்னிலங்கை காத்து தேவருலகம் காத்து
சொன்ன சொல் காத்திடும் வாமனா
கோவிந்தா

மாமல்ல புரத்தில் மாயமாய் வந்த
யோகியே
தாமதம் செய்யாது தலத்தில் சயனித்த
பெருமாளே
வற்றாத கடலில் வைகுண்ட கோலத்தில்
படுத்தவனே
எற்றைக்கும் என்தன்னோடு
எழுபிறவிக்கும் அருள்வாயே

சூடிய மலரோடு சூத்திரம் பலசெய்வாய்

பாடிய பாட்டில் பாற்கடலில் படுத்திடுவாய்
ஓடிய வாழ்க்கையில் ஒய்யாரமாய்
ஒளிந்திடுவாய்
தேடிய விழிகளுக்கு திகட்டாது
தெரிந்திடுவாய்

http://temple.dinamalar.com/New.php?id=649

## திரு சாரநாத பெருமாள் - திருச்சேறை
108 திவ்ய தேசங்கள் - 21

மணவாள நாயக்க மன்னனின் மனமாற்றி
குணமான நரசபூபாலன் கோயிலைக் கட்ட
மணமான திருச்சேறை மண்ணிலே தங்கி
அணங்கோடு அண்ணல் அழகாய்
நின்றதென்ன!

கங்கை பெரியதா காவேரி பெரியதா
மங்கைகள் வாதிட மாலும் தீர்ப்பளிக்க
சங்கும் சக்கரமும் சாரநாத பெருமாளும்
தங்கிய திருச்சேறை தலத்தின் அழகென்ன!

அஞ்சியே பிரம்மன் அங்குமிங்கும் அலைய
மிஞ்சிய வேதத்தை மறைக்க முயன்றிட
தஞ்சமென்று உன்னிரு தாளடி பணிந்திட
பஞ்சலக்ஷ்மி நாயகிகள் பக்கத்தில்
நின்றதென்ன

மண்ணிலே அழியாத மகாபிரளய சாரமாய்
விண்ணிலே வைகுண்டம் வேதத்தின்
சான்றே
மண்ணிலே கடத்தை மகத்தாய் செய்து
கண்ணிலே படாது காத்த வேதமென்ன

https://www.templepurohit.com/hindu-temple/sri-saranatha-perumal-templetamil-nadu/

## உப்பிலியப்பன் - திரு நாகேஸ்வரம் /திருவிண்ணகரம்

108- திவ்ய தேசங்கள் 22

எட்டடி உயர என்னருமை அப்பனே
எட்டாத உயரத்தில் எழுந்தருளும் அப்பனே
உப்பில்லா பண்டம் உளமார உண்பவனே
அப்பனாய் அரியாய் அண்டம் காப்பவனே

விதியை மாற்றி விலையில்லா பெருவாழ்வை
பதினாறு வயதையவன் பருவமாய் பெற்றானே
பெற்றவன் பெற்ற பிராட்டி பூமாவை
உற்றவன் நீயும் உகந்து பெற்றாயே

முதியவராய் வந்து மூத்தவராய் நின்றாய்
அதிசயமாய் மாறி அழகனாய் நின்றாய்
உணவை சமைக்க உத்தமி அறியாதுநிற்க
குணமே பெரிதென்று கோயிலில் நின்றாய்

அன்பே சுவைக்கும் அறுசுவையாய் இனிக்கும்
என்பதை உரைக்க எப்போதும் உப்பின்றி
அன்னம் உண்டு அருளிக் காப்பாய்
எண்ணத்தில் வேரூன்றி எங்களைக் காப்பாய்

பார்வையில் கருணை பரந்தாமன் சொரிய
மார்பிலே மகாலக்ஷ்மி மணத்திலே துளசி
திருநாகேஸ் வரத்தில் திகழும் பெருமாளே
திருவிண்ணகரதத்தின் திவ்யதேசப் பெருமாளே!

https://www.templepurohit.com/hindu-temple/sri-oppiliappan-perumal-templetamil-nadu/

# வையம் காத்த பெருமாள் - திருக்கூடலூர்

108- திவ்ய தேசங்கள் -23

கூடலூர் தலத்தில் கோலமிட்ட பெருமாளே
பாடலில் பாடிட பரவசம்தரும் பெருமாளே
வையகம் காத்த வைகுண்ட பெருமாளே
கையிலே சக்கரம் கொண்டிடும் பெருமாளே

ஏந்திய சக்கரத்தை ஏவிடும் பெருமாளே
வேண்டிய அம்பரீஷனுக்கு வீசிய
பெருமாளே
சினந்த துர்வாசர் சீற்றமடக்கிய பெருமாளே
மனத்தால் பின்பு மன்னித்த பெருமாளே

வராக வடிவிலே வந்திடும் பெருமாளே
அராஜகம் அழிக்க ஆணையிடு பெருமாளே
கூடிடும் நதிகள் கும்பிடும் பெருமாளே
ஓடிடும் காவிரி தொழுதிடும் பெருமாளே

கிளிக்கு தரிசனம் கொடுத்த பெருமாளே
விளியில் ஹரியாய் வந்திடும் பெருமாளே
ஒலித்த சங்கில் ஓங்கிடும் பெருமாளே
கலியிலே எங்களை காத்திடு பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=383

## ஜெகன்னாத பெருமாள் - நந்திபுர விண்ணகரம்- கும்பகோணம்

108 திவ்ய தேசங்கள் -24

திருமகள் தவத்திற்கு திருவருள் திருமாலே
திருமகளை கொண்ட திருமார்பு திருமாலே

நந்தியின் சாபம் நீக்கிய திருமாலே
நந்திபுர விண்ணகர நற்கோவில் திருமாலே

தன்னையே தியாகம் தந்தவனின் திருமாலே
உன்னையே நினைத்தவர் உள்ளத்து
திருமாலே

ஜகத்தை காத்திடும் ஜெகன்னாத திருமாலே
அகத்தில் அமர்ந்த அரங்கத்து திருமாலே

எங்கும் வீற்றிருக்கும் எழிலான திருமாலே
பொங்கும் அழகுடன் பொலிவான
திருமாலே

நலம்தரும் நாமமான நாராயண திருமாலே
வளம்தரும் வாசலான வைகுண்ட
திருமாலே

ஆழ்வாரின் பாசுரத்தில்
அழகான திருமாலே
ஊழ்வினை அகற்றிடும் உயரிய திருமாலே

http://temple.dinamalar.com/New.php?id=353

**கஜேந்திர வரத பெருமாள் -**
**கபிஸ்தலம் (திருக்கண்டியூர்)**
108 திவ்ய தேசங்கள் - 25

அபயம் கொடுக்க ஆதிமூலமே வந்திடு
உபயமாய் சக்கரம் உதவிட வந்திடு

பிறவியின் பாவம் பறந்தோட வந்திடு
துறவியின் கோபம் தூரஓட வந்திடு

பிடிபட்ட கஜேந்திரன் பிணியினை நீக்கிடு
அடிபட்ட காலை அன்பிலே தோய்த்தெடு

காலை பந்தங்கள் கவ்விட காத்திடு
சோலை கானமாய் சுகமாய் வந்திடு

துயரக் கடலில் தோணியாய் வந்திடு
உயரிய மோட்சம் ஊட்டமாய் தந்திடு

அனுமனைக் காண அழகனாய் வந்திடு
மனுவின் நீதியை மண்ணில் காத்திடு

எங்களைக் காத்திட எழிலாய் வந்திடு
மங்காது மாறாது மானுடம் காத்திடு

https://www.templepurohit.com/hindu-temple/sri-gajendra-varadha-perumal-templetamil-nadu/

## வல்வில் ராமன் - திருப்புள்ளம் பூதங்குடி

108 திவ்ய தேசங்கள் -26

ராம ராம ராகவா நமோநம
ராம சந்த்ர ரூபா நமோ நம
ராஜ கம்பீர தேவா நமோ நம --- ரகு ராமா

ஓடி வந்த தோழா நமோ நம
வாடி விழும் ஜடாயு நமோ நம
பாடி மகிழும் பாரில் நமோ நம -- தேவதேவா

நாம தசரத குமாரா நமோ நம
பூம சுந்தரி தேவா நமோ நம
ஈமக் கடன் செய்தாய் நமோ நம - ஹரிகேசவ

பள்ளி கொண்ட ராமா நமோ நம
புள்ளிற்கு அருளும் புண்யா நமோ நம
கொள்ளை அழகு கொண்டாய் நமோ நம ....
கோதண்டா

நேர்ம நியதி புருஷா நமோ நம
சீர்ய வாழ் சுந்தரா நமோ நம
சோர்வு தீர் ஸ்வரூபா நமோ நம .... அருள்
தாராய்

ராம ராம ராகவா நமோநம
ராம சந்த்ர ரூபா நமோ நம ராஜ கம்பீர தேவா
நமோ நம --- ரகு ராம

http://temple.dinamalar.com/New.php?id=394

## சாரங்கபாணி -கும்பகோணம்

108 திவ்ய தேசங்கள் - 27

திருக்குடந்தை கோவிலில் திருசயனம்
பூண்டவனே
திருமகளை மணந்து திருவருள்
புரிந்தவனே
வில்லேந்தி நின்றபடி வேந்தனாய்
வந்தவனே
சொல்லுக் கழகாய் சுந்தரத்தேரில்
வந்தவனே

எழுந்த சயனமாய் எழிலாய்ப் படுத்தவனே
தொழுது வணங்க தூமலர் மாலனே
பொற்றாமரை குளத்தில் புதிதாய்
பூத்தவனே
கற்றறிந்த ஆழ்வார் கருத்தில் நின்றவனே

ஓராயிரத்துள் இப்பத்தும் ஓங்காரமாய்
இசைத்தவனே
ஆராவமுத ஆழ்வாராய் அழியாது
நின்றவனே
நாலாயிர பிரபந்தத்தை நாதமுனிக்
களித்தவனே
கோலாகல உற்சவமாய் கொண்டாடப்
படுபவனே

வடக்கும் தெற்கும் வகையாய் வாசலிருக்க
இடக்கின்றி பரமபதம் எமக்கிங்கு
அளிப்பவனே

வீட்டுடன் மாப்பிள்ளை விளையாடி
இருந்திட
மேட்டு சீனிவாசனாய் மெத்தனமாய்
நிற்பவனே

சேவிக்கும் பக்தருக்கு சேவை செய்பவனே
ஆவிக்கும் ஆன்மாவிற்கும் அமைதி
அளிப்பவனே
தேரிலே வந்த தென்னாட்டு மன்னவனே
பாரிலே மணந்த பாற்கடல் பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=644

## ஆண்டளக்கும் ஐயன் - திருஆதனூர்

தினம் ஒரு பாடல்
108 திவ்ய தேசங்கள் -28

படி அளக்கும் பாற்கடல் பெருமாளே
படி காட்டி பாதைக்காட்டும் பெருமாளே

ஏடும் எழுத்தாணியும் ஏந்திய பெருமாளே
ஈடு இணை இல்லாத பெருமாளே

வணிகனாய் வந்து வையகம்காத்த
பெருமாளே
அணிகலனாய் திருமகளை அணிந்த
பெருமாளே

காமதேனு அகந்தை கலைத்த பெருமாளே
வாமன அவதாரம் வடித்த பெருமாளே

மரக்கால் அளக்க மண்டலம் பெருமாளே
மரக்கால் துளசியின் மகத்துவ பெருமாளே

ஆஅவள் காலடியில் அணைத்த
பெருமாளே
ஆதவன் வாயிலாய் அண்டம்நோக்கும்
பெருமாளே

படைத்த களைப்பில் படுத்த பெருமாளே
குடையாய் சேடனைக் கொண்ட
பெருமாளே

தூணிலும் இருந்து துரும்பான பெருமாளே
தூணிலே முக்திக்குத் துடுப்பான
பெருமாளே

எங்கும் நிறைந்த எழிலான பெருமாளே
பொங்கும் அழகாய் பூத்திடும் பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=345

https://www.templepurohit.com/hindu-temple/sri-aandu-alakkum-ayan-perumal-templetamil-nadu/

**கோலவில்லி ராமர்-திருவெள்ளியங்குடி**

தினம் ஒரு பாடல்
108 திவ்ய தேசங்கள் -29

கருமை நிறக் கண்ணனின் வடிவமே
காருண்ய சீல காண்டீப வடிவமே
கிருபை கூர்ந்திடும் கிருஷ்ண வடிவமே
கீர்த்தி வாய்ந்திடும் கேசவ வடிவமே
குடையால் கோவர்த்தனம் காத்த வடிவமே
கூர்ம அவதார கோலாகல வடிவமே
கெஞ்சிய மயனக்கு கோலமான வடிவமே
கேடுகளை அகற்ற கோவிலான வடிவமே
கையிலே வில்லேந்தி காத்திடும் வடிவமே
கொஞ்சும் அழகுடன் குழந்தை வடிவமே
கோலவில்லி ராமராய் கொலுவிருக்கும் வடிவமே
கௌசல்யா புத்திரனாய் குலம்காக்கும் வடிவமே

சக்கரம் கருடனுக்கு சங்குடனளித்த வடிவமே
சாப விமோசனம் சாத்தியமாக்கும் வடிவமே
சிந்தை கவர்ந்திடும் சிருங்கார வடிவமே
சீரும் சிறப்புடன் செருக்ககற்றும் வடிவமே
சுக்கிரன் விழியை சுடராக்கும் வடிவமே
சூத்திர தாரியாய் சுகமளிக்கும் வடிவமே

செங்கதலி வாழை செழிக்கஅருளும்
வடிவமே
சேங்கானுர் அருகில் சேர்ந்தருளும்
வடிவமே
சைன்யம் இல்லாது சாரதிவென்ற வடிவமே
சொக்க வைக்கும் சுந்தர வடிவமே
சோபிக்கும் முகமுடன் சுகந்த வடிவமே
சௌபாக்யம் அருளும் சௌந்தர்ய
வடிவமே

http://temple.dinamalar.com/New.php?id=374

## நித்திய கல்யாண பெருமாள்-சென்னை

தினம் ஒரு பாடல்
108 திவ்ய தேசங்கள் -30

நாயகன் ஒருவனாய் நல்லுலகில் நின்றவனே
நாயகி பலரை ஒன்றாக்கிய நாயகனே
பலியின் தவத்திற்கு பறந்து வந்தவனே
கலியிலும் எங்களை காத்து அருள்பவனே

வராக முகமாய் வந்தருள் புரிபவனே
தகாது செய்யாது தடுத்தாட் கொள்பவனே
குனிக்கு முக்தியை குன்றாது தந்தவனே
முனிவரின் பத்தினிக்கு முன்னின்று அருளியவனே

நித்தியம் கல்யாணம் நிலத்தில் நடத்துபவனே
சத்திய வேத சரித்திர நாயகனே
உத்தமி லக்ஷ்மி உட்காரத் தாங்கியவனே
மெத்தன சேடன் மேலே நின்றவனே

அகிலவல்லி தாயாரை அண்டக் கொடுத்தவனே
சகியாய் கோமளவல்லி சந்நிதி தந்தவனே
திருமகள் இடமாக திருக்கோவிலில் நின்றவனே
திருவிடந்தைக் கோவிலில் திருவருள் புரிபவனே

http://temple.dinamalar.com/New.php?id=263

## ஹர சாப விமோசன பெருமாள் - திருக்கண்டியூர்

108 திவ்ய தேசங்கள் -31

சிவனின் சாபத்தை சிதைத்த பெருமாளே
அவனியைக் காத்திடும் ஆனந்த
பெருமாளே

கபாலம் விழுந்த காலடி பெருமாளே
அபார அழகுடன் அமைந்த பெருமாளே

கோமள வல்லியுடன் கொலுவிருக்கும்
பெருமாளே
தாமரை மலரினைத் தாங்கிடும் பெருமாளே

கண்தான தேசமாய் கண்டியூர் பெருமாளே
மண்ணிலே உறைந்த மதுசூதன
பெருமாளே

பஞ்சகமல நிலமாய் பாரினில் பெருமாளே
கொஞ்சிடும் வதன கோபால பெருமாளே

கண்டியூர் தலத்தில் கால்வைத்த
பெருமாளே
அண்டம் காத்திடும் அதிசய பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=348

## அப்பக்குடத்தான் - கோவிலடி தஞ்சாவூர்
108 திவ்ய தேசங்கள் - 32

அப்பத்தை குடத்துடன் ஆர்வமாயுண்ட அப்பனே
ஆபத்தில் கைகொடுக்கும் ஆண்டவ ரங்கனே

இம்மையிலும் மறுமையிலும் எங்களைக் காப்பவனே
ஈரேழு உலகிலும் இணையில்லா அழகனே

உபமன்யு சாபத்தை ஒருநொடியில் நீக்கியவனே
ஊருக்கென்று செய்த உணவை உண்டவனே

எழிலாய் சயனித்த எளிய அந்தணரே
ஏற்றமிகு கோவிலடி ஏறிய பெருமாளே

ஐயமின்றி மார்க்கண்டேயன் அச்சம் போக்கியவனே
ஒயிலாய் திருப்பேர் ஊரிலே படுத்தவனே

ஓங்கார வடிவமாய் நம்மாழ்வார் தொடர்ந்தவனே
ஔடதமும் இனிக்க அருளைப் பொழிபவனே

ரங்கா ரங்கா!

http://temple.dinamalar.com/New.php?id=349

## அன்பில்- சுந்தர்ராஜ பெருமாள் (வடிவழகிய நம்பி) -திருச்சி

108 திவ்ய தேசங்கள் -33

கொள்ளை அழகை கொள்ளை
கொண்டவனே
பள்ளியறையில் அழகாய் பள்ளி
கொண்டவனே

நிலையில்லா அழகு நிலைக்காது
என்றவனே
விலையில்லா உண்மை விளங்க
வைத்தவனே

ஆணவம் அழிக்க ஆணாய் பிறந்தவனே
காணக் கண்கோடி கணத்தில் தந்தவனே

தவமாமுனிவர் சுதபா தவத்திற்கு
வந்தவனே
தவமாமுனிவர் துர்வாசவாக்கு தவறாது
காத்தவனே

நிலத்திலும் நீரிலும் நிலையாய்
நின்றவனே
சுலபத்தில் அன்பை சொற்பமாய்
பொழிபவனே

ஆண்டு அவளை ஆண்ட ஆண்டவனே
ஆண்டாள் தன்னை அண்டத்தில்
மணந்தவனே

வடிவில் அழகிய வடிவழகிய நம்பியே
மடியில் வல்லியை மடித்த அழகனே

அன்பில் கோவிலில் அன்பில்
அமைந்தவனே
அன்பால் அணைத்து அன்பரில்
அமர்ந்தவனே

http://temple.dinamalar.com/New.php?id=167

**புண்டரீகாட்சன்- திருச்சி**
108 திவ்ய தேசங்கள் -34

வெண்மை பாறையில் வெள்ளறை
வாசனே
கண்ணைக் கவரும் கலியுக வண்ணனே
புண்டரீக துளசிக்குப் பூத்த தாமரையே
மண்டலம் காத்திடும் மகா விஷ்ணுவே

படிகள் பதினெட்டு பாங்காய் அமைந்திட
படிக்க பதினெட்டு அத்தியாய கீதையே
படிகள் நான்கும் பரிசுத்த வேதமே
படிகள் ஐந்தும் பஞ்ச பூதங்களே

பலிபீட திருமஞ்சன படையல் பொங்கலே
கலியிலே வேண்டுதலை கணத்தில்
நடத்துமே
சிபியின் அன்புக்கு சிரித்துவந்த வராகமே
சுபிட்ஷம் தழைக்க சுந்தர உருவமே

திருப்பணி செய்யவே திரண்ட மக்களில்
திருமாலும் ஒருவராய் திருவருள்
செய்தாரே
திருமகள் செண்பகவல்லி திருவிழா
காலத்தில்
திருவருள் புரிந்திட திறம்பட எழுவாளே

http://temple.dinamalar.com/New.php?id=182

**உத்தமர் கோவில் -திருச்சி**
108 திவ்ய தேசங்கள் -35

உத்தமராய் உதித்த உயரிய விஷ்ணுவே
சித்தருக் கருளும் சிந்தைகவர் சிவனே
சத்தியமாய் உலகை சாத்தியமாக்கும்
பிரம்மனே
பத்திரமாய் மும்மூர்த்திகளும் பாராளும்
கோவிலே

துணையோடு மூர்த்திகள் துணையாகும்
தலமே
வினைகளின் தோஷம் விளையாட்டாய்
நீங்குமே
அன்னை மகாலக்ஷ்மி அன்பிலே
அருள்புரிய
அன்னமிட்ட கபாளம் அழகாய் நிறையுமே

பிச்சாண்டி கோலத்தில் பிறைசூடன்
காத்திட
அச்சங்கள் அகற்றி ஆண்டவன் அருளிட
சைவமும் வைணவமும் சரிக்கு சரியாய்
கைவல்யம் செய்தே கருணை பொழியுமே

அறிவியலும் ஆன்மீகமும் ஆணவத்தை
அழித்திட
அரியும் அரனும் அறிந்தவருக் கொன்றாக
அன்பே சிவமாக ஆர்வமே நெய்யாக
என்னைக் காத்திடும் எழிலான ஜோதியே

http://temple.dinamalar.com/New.php?id=169

## அருள்மிகு ரங்கநாதர் திருக்கோவில் -திருவரங்கம்

108 திவ்ய தேசங்கள்- 36

திருவரங்க சயனத்தில் திருபள்ளி
திருவரங்கா
திருத்தலத்தில் இருபத்தொரு திருக்கோபுர
திருவரங்கா
திருவரங்க வீதிகளில் திருவருள்புரி
திருவரங்கா
திருவரங்க பிரகாரத்தில் திருஅவதார
திருவரங்கா

திருஏழு நாச்சிமார் திருமணம்செய்
திருவரங்கா
திருஏழு முறைகளில் திருவலம்வரும்
திருவரங்கா
திருஏழு முறைநெல்லும்
திருஅளவு திருவரங்கா
திருஏழு உற்சவம் திருநாயகி திருவரங்கா

திருஏழு நாளன்று திருவடிசேவை
திருவரங்கா
திருஏழு அவதார திருராம திருவரங்கா
திருஏழு ஆழ்வார்கள் திருப்பாசுர திருவரங்கா
திருஏழு மாதத்தில் திருக்குடம் திருவரங்கா

திருராமர் திருக்கரத்தால் திருபூஜை
திருவரங்கா
திருஇலங்கை நோக்கியே திருசயன
திருவரங்கா

திருப்பள்ளி பாற்கடலில் திருக்கோல
திருவரங்கா
திருநாபி பிரம்மனுக்கு திருவருள்
திருவரங்கா

திருமுத்து அங்கியில் திருஆறு திருவரங்கா
திருக்கல் தாங்கிய திருபாண்காத்த
திருவரங்கா
திருநாமம் பாடிய திருமங்கைகூடிய
திருவரங்கா
திருராமானுஜருக் கருளிய திருமோட்சம்
திருவரங்கா

திருநாள் தினமுமென திருப்போர்வை
திருவரங்கா
திருக்காவிரி தீர்த்தத்தால் திருஅபிஷேக
திருவரங்கா
திருபெருக்கு திருவிழா திருப்பேறு
திருவரங்கா
திருகம்பர் கூற்றுக்கு திருத்தூணுடை
திருவரங்கா

திருஉற்சவ திருவிழா திருபூபதி திருவரங்கா
திருகருட விஸ்வரூப திருவேஷ்டி
திருவரங்கா
திருஇரவு பத்தும் திருதினம்பத்துமோ
திருவரங்கா
திருசொல் பத்துமோ திருவழகுபாடிட
திருவரங்கா

http://temple.dinamalar.com/New.php?id=908

**பக்தவத்சலபெருமாள் -திருநின்றவூர்**
108 திவ்ய தேசங்கள்- 37

பக்தனுக் கருள பரிவுடன் வந்தாய்
இத்தலம் சிறக்க இறங்கி வந்தாய்

திருமகள் நின்ற திருஊரில் வந்தாய்
திருக்கோல பஞ்சாயுதம் திவ்யமாய்
பூண்டாய்

பாடாத ஆழ்வாரை பாடச் செய்தாய்
வாடாத பாரிஜாதம் வளரச் செய்தாய்

இன்னுமொரு பாடலை இனிதாய் கேட்டாய்
கண்ணுக்குள் கனவுக்குள் கண்ணமங்கை
சென்றாய்

கோபித்த திருமகள் கோவிலுக்கு வந்தாய்
சோபித்து சந்நிதியில் சுகமாய் நின்றாய்

திருவும் நின்றிட திருமாலும் நின்றிட
திருமணம் நடந்திட திருவிழா நடந்திடும்

முன்னால் நான்நடந்திட பின்னால்
நீகாத்திட
அன்னையாய் மாறியே அவளும் வந்திட

சம்சார கடல் சட்டென்று அடங்கும்
எம்பிரானை நினைக்க எல்லாம் இனிக்கும்

http://temple.dinamalar.com/New.php?id=131

## எவ்வுள் கிடந்தான் - வீரராகவ பெருமாள்- திருவள்ளூர்

108 திவ்ய தேசங்கள் - 38

அளக்க முடியா அரிசியை வைத்து
கலக்க மில்லா கருணையில் பிறந்தாரே
முற்பயனால் சாலிஹோத்ர முனிவர் ஆனாரே
பிற்பயனில் உன்னருள் பெற்று நின்றாரே

ஒருவருடம் தவமிருந்து ஒருபடி அன்னமிட்டு
ஒருஅதிதி வருகைக்கு ஒருமுனிவர் காத்திருக்க
ஒருதெய்வ பெருமாள் ஒருவழியாய் வந்திங்கு
ஒருபடி அன்னமுண்டு ஒடுங்க இடம்கேட்டாய்

எவ்வுள் படுக்க என்று நீ கேட்டுநிற்க
இவ்வுள் படுக்க என்று அவர் சொல்லிட
அவ்வுள் அன்று ஆனதே திருவள்ளூர்
இவ்வுள் நீவந்திட இனிமை பிறந்ததே

வையத்தில் நோய்தீர்க்கும் வைத்தியன் ஆனாய்
ஐயமின்றி குறைகளை அகற்றி நின்றாய்
பைய நடந்து பாதசேவை கேட்டாய்
கையசையாது சயனித்து கலியுகம் காப்பாய்!

http://temple.dinamalar.com/New.php?id=127

**விஜயராகவ பெருமாள் -**
**திருப்புட்குழி, காஞ்சிபுரம்**
108 திவ்ய தேசங்கள்ட-39

திருப்புட் குழியில் திருக்கோல பெருமாளே
திருத்தொடை ஜடாயு தாங்கிய பெருமாளே

திருத்தலத்தில் ஜடாயு திருக்காரிய
பெருமாளே
திருவீதி வலத்தில் திருமரியாதை
தருவோமே

வலப்புறம் பூதேவி இடப்புறம் ஸ்ரீதேவி
தலத்திலே இருவரும் தாரணி காப்பாரே

குழந்தை பிறக்க குலமும் தழைக்க
மழலை தவழ்ந்திட மடியில் தானியமே

கல்குதிரை அசைய கருத்தும் அசையுமே
கல்லும் கண்ணனாக காவியம் பேசுமே

பறவைக்கும் மோட்சம் பரந்தாமன்
அளித்திட
உறவாய் வந்த உத்தம விஜயராகவனே

http://temple.dinamalar.com/New.php?id=261

## நீர் வண்ண பெருமாள் - திருநீர்மலை - சென்னை

108 திவ்ய தேசங்கள் - 40

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தவனே
அன்றும் இன்றும் என்றும் காப்பவனே
நீர்வண்ண நிறமாகி நீலவண்ணமாய்
நின்றவனே
கார்வண்ண மேனியாகி காத்து நிற்பவனே

வால்மீகி காண மணக்கோலம் பூண்டவனே
கால்தூக்கி உலகை களைப்பின்றி
அளந்தவனே
மார்க்கண்டேயன் கண்டிட மார்கத்தில்
கிடந்தவனே
பார்வைக் கழகாய் படுத்து அருள்பவனே

சீறியசிம்மம் கண்டு சிறுவன் அஞ்சிவிட
கோரிக்கைக் கிணங்கிய குழந்தை
நரசிம்மனே
சூழ்ந்த நீரும் சுலபத்தில் வற்றிட
ஆழ்வாரும் உன்னழகை அனுபவித்து
இரசித்தாரே

ராமனாய் அவதரித்து ரங்கனாய் படுத்தவனே
வாமனனாய் வந்திங்கு வானுலகம்
அளந்தவனே
நான்கு உருவில் நாராயணக் கோலமே
சான்றாய் நின்ற சரித்திரக் கோவிலே

http://temple.dinamalar.com/New.php?id=497

## விளக்கொளி பெருமாள்-
## திருத்தண்கா - தூப்புல் -காஞ்சிபுரம்

108 திவ்ய தேசங்கள் -41

யாகம் காக்கவந்த யௌவன ஒளியே
சோகம் போக்கிடும் சுவர்க்க பூமியே

பிரம்மன் வேண்டிடவந்த பிரம்மாண்ட ஒளியே
வரத்தை வழங்கிடும் வரதராஜ பெருமாளே

இருளைப் போக்கிடும் இதமான விளக்கே
அருளைச் சொரியும் ஆதி கேசவனே

வைணவத் தாயின் வேதாந்த மணியே
வைணவ மதத்தின் வேதமான ஒளியே

எங்கும் பரவிய என்னருமை பெருமாளே
சங்கு சக்கரமுடன் சன்னதி பெருமாளே

செல்லும் இடத்திற்கு சொல்லாமல் வந்திடு
அல்லும் பகலும் அலுக்காது காத்திடு

நாடுவிட்டு நாடுவந்திடு நாளும் உன்னைப்
பாடும் பாக்கியம் பாவைக்குத் தந்திடு

http://temple.dinamalar.com/New.php?id=270

## அழகிய சிங்க பெருமாள் - திருவேளுக்கை -காஞ்சிபுரம்

108 திவ்ய தேசங்கள் -42

அழகிய சிங்கவடிவ ஆனந்த பெருமாளே
ஆழமாய் சிந்திக்கவைக்கும் அத்வைத
பெருமாளே

இன்னல் களைய இனிதேவந்த பெருமாளே
ஈன்ற அருளில் இவ்வுலகம்தழைக்கும்
பெருமாளே

உன்னருள் பெறவே உரைத்தநாம
பெருமாளே
ஊனுடல் மறந்து உவகைதரும் பெருமாளே

எங்கும் இருக்கும் எதிலுமிருக்கும்
பெருமாளே
ஏங்கும் பிரகலாதன் எதிரில்வந்த
பெருமாளே

ஐயம் அகற்றிட அகிலம் காத்திட
பெருமாளே
ஒய்யார வடிவில் ஒருயாகம்காத்த
பெருமாளே

ஓங்கார வடிவ உத்தமநாயக பெருமாளே
ஒளடத அமுதாய் வாழ்வளிக்கும்
பெருமாளே

சரஸ்வதி இலக்குமி சண்டைபோக்கிய
பெருமாளே
பரலோக வாழ்வில் பாதைகாட்டும்
பெருமாளே

ஆசையுடன் இவ்விடத்தில் அமர்ந்த
பெருமாளே
ஓசையாய் இதயத்தில் ஒலிக்கும்
பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=264

## கள்வப் பெருமாள் -ஆதிவராகப் பெருமாள் -காஞ்சிபுரம்

108 திவ்ய தேசங்கள்- 43

நூறுநாள் பாடவைத்த நூதனப் பெருமாளே
மாறுதலே இல்லாத மகத்தான பெருமாளே

ஆதியாய் அமைந்து அந்தமில்லா
பெருமாளே
ஓதிய வேதங்களில் ஒளிரும் பெருமாளே

கள்வனாய் வந்திங்கு கருத்தினில்நின்ற
பெருமாளே
உள்ளுக்குள் அழகாய் ஒளிந்த பெருமாளே

உருவத்தின் அழகு உண்மையில்லை
பெருமாளே
அருவத்தில் உணர்த்தி அருளிய
பெருமாளே

தங்கையின் கோவிலில் தங்கிய
பெருமாளே
மங்கை வணங்கிய மதிமயக்கும்
பெருமாளே

உலகை அளக்கும் ஓங்கார பெருமாளே
சுலபத்தில் அணுவாய் சுருங்கும்
பெருமாளே

மீனாய் வந்தெங்களை மீட்ட பெருமாளே
தானாக பூத்திடும் தாமரை பெருமாளே

கூர்ம வடிவம் கூறும்உண்மை பெருமாளே
பார்த்தனின் சாரதி பாருக்களித்த
பெருமாளே

வராக வடிவத்தில் வந்துகாத்த பெருமாளே
அராஜகம் நீக்கி அகிலம்காத்த பெருமாளே

நரகரி ரூபத்தில் நலம்தரும் பெருமாளே
கரம் கூப்பி கும்பிடுவோம் பெருமாளே

மூன்றடி பெறவே முன்வந்த பெருமாளே
அன்று உலகை அளந்த பெருமாளே

பரசுராமனாய் அவதரித்த பரிசுத்த
பெருமாளே
சிரம் தாழ்த்தி சிந்தைவணங்கும்
பெருமாளே

ஏகபத்தினி விரதனாய் எழுந்தருளிய
பெருமாளே
மோகத்தை கொல்லும் முழுமுதற்
பெருமாளே

கருமேனி கண்ணனாய் கண்கவர்
பெருமாளே
சிறுபாலக வடிவில் சிந்தைகவர்
பெருமாளே

புத்தராய் வந்திங்கு புவிகாத்த பெருமாளே
சித்தரும் அறியா சிறந்த பெருமாளே

கல்கியாய் வருவாயென காத்திருக்கிறோம்
பெருமாளே
அல்லும் பகலும் அனுதினமருளும்
பெருமாளே

பள்ளிகொண்டு காக்கும் பரமசுக
பெருமாளே
அள்ளிய அழகில் அண்டம்நிறை
பெருமாளே

நின்ற கோலத்தில் நிறையும் பெருமாளே
என்றும் காக்கும் எழிலான பெருமாளே

இருந்த கோலத்தில் இதமளிக்கும்
பெருமாளே
கருத்தனில் கலந்த கள்வப் பெருமாளே

கிடந்த கோலத்தில் கிருபையளிக்கும்
பெருமாளே
நடக்கும் செயல்களை நல்லதாக்கும்
பெருமாளே 20

வரதராஜனாய் வடிவுகொண்ட
வல்வில்ராம பெருமாளே
ஹரசாப விமோசன ஹரிநாராயண
பெருமாளே

புண்டரீகாட்சனாய் நின்ற புருஷோத்தம
பெருமாளே

விண்ணகர பெருமாளான விஜயராக
பெருமாளே

சொன்ன வண்ணம் செய்த பெருமாளே
நின்ற வண்ணம் நித்யகல்யாண
பெருமாளே

ஆதிகேசவ அற்புத நாராயண பெருமாளே
ஓதியவேத ஆதனூர் ஒய்யார பெருமாளே

திருவரங்கக் கோவிலில் திருவருள்
பெருமாளே
திருக்கண்ண மங்கை திருபக்தவதசல
பெருமாளே

அழகிய சிங்கமாய் அருளிய பெருமாளே
பழகிய பாலகனாய் பாம்பணை பெருமாளே

ஆழ்வார் பாடிய ஆதிநாத பெருமாளே
ஆழ்கடல் நீரவண்ண அழகிய பெருமாளே

திருவள்ளூர் தலத்தில் திருசயன
பெருமாளே
திருநின்ற ஊரில் திருநின்ற பெருமாளே

உத்தம கோவிலின் உத்தம பெருமாளே
சத்தமில்லா திருச்சேறை சாரங்கநாத
பெருமாளே

அப்பக்குடத்தால் எங்களை அளக்கும்
பெருமாளே

ஒப்பிலி அப்பனாய் உப்புநீக்கிய பெருமாளே

விளக்கொளி பெருமாளாய் வீற்ற
பெருமாளே
அளக்கும் அடியில் அண்டமிகுந்த
பெருமாளே

உறையூர் மணவாள ஒய்யார பெருமாளே
உறையும் அன்பில் உள்ளத்து பெருமாளே

வையம் காத்த வைகுண்ட பெருமாளே
ஐயம் நீக்கிடும் அழகியசிங்க பெருமாளே

நாச்சியார் கோவிலில் நம்பிய பெருமாளே
ஆச்சியர் அன்பில் ஆடிய பெருமாளே

திருக்கண்ண புரத்தில் திருசவுரிராஜ
பெருமாளே
திருச்சிறு புலியூர் திருக்கோவில்
பெருமாளே

தேவாதி ராஜனாய் தேரமுத்திய பெருமாளே
தேவாதி தேவனாய் தெய்வநாயக
பெருமாளே

கோலவில்லி ராமனாய் கொலுவிருக்கும்
பெருமாளே
காலத்தை அழித்த காவளம்பாடி
பெருமாளே

திரிவிக்ரம திருக்கோவில் திவ்யதேச
பெருமாளே
பரிமள ரங்கநாத பத்ரிநாராயண பெருமாளே

செம்பொன் பேரருள் செய்கோவில்
பெருமாளே
செங்கண்மால் திருக்கோவில் செல்வ
பெருமாளே

வெள்ளக்குளக் கோவிலில் வீற்ற
பெருமாளே
அள்ளமுடியா அழகுடை அண்ணன்
பெருமாளே

பார்த்தன் கேட்ட பள்ளித்தாமரையாள்
பெருமாளே
சார்ந்த திருச்சேறை சாரநாத பெருமாளே

கோவிந்த ராஜனாய் கோவில்கொண்ட
பெருமாளே
ஆவினன் குடியில்பிறந்த ஆண்டவ
பெருமாளே

திருநீரக பெருமாளாகி திருவருள்தரும்
பெருமாளே
திருப்பாடக தூதனாகி திருப்பாண்டவருள்
பெருமாளே

நிலவளந்து நீரளந்த நிலாதுண்ட
பெருமாளே
உலகளந்து ஊரளந்த உத்தம பெருமாளே

மகாபலிக் கருளிய மகாவிஷ்ணு
பெருமாளே
மகாபலிக் கோவிலில் மடிசாய்ந்த
பெருமாளே

யோக நரசிம்மராய் யெளவன பெருமாளே
யாகம் காத்த யாதவ பெருமாளே

பவள வண்ணத்து பாற்கடல் பெருமாளே
கவர்ந்து இழுக்கும் கள்ளப் பெருமாளே

வேங்கட வண்ணனாய் வீற்ற பெருமாளே
ஏங்கிய நெஞ்சுக்குள் எழுந்தருளும்
பெருமாளே

வடபத்ர சாயியாய் வரமளித்த பெருமாளே
இடர்களை போக்கிடும் இனியரகுநாத
பெருமாளே

நூறடி பூவினை நூலிலே கோத்தேன்
பெருமாளே
சாரதி நீயாகி சாட்சியாய் காப்பாய்
பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=72

## நிலாதுண்டப் பெருமாள்
108 திவ்ய தேசங்கள் -44

ஆலகால விடத்தை அழித்த நிலவே
மாலனின் நிறத்தை மாற்றிய நிலவே

விஷ்ணுவின் நோயை விலக்கிய நிலவே
உஷ்ணத்தை குறைத்த உல்லாச நிலவே

பார்வதி தவமிருக்க பரசிவன்தலை நிலவே
கார்மேனி நிறமாற காரண நிலவே

நிலவைச் சுமந்த நீலமேக நிலவே
நிலமகள் நாபியில் நின்ற நிலவே

காலத்தால் அழியாது காத்திடும் நிலவே
சாலச்சிறந்த அழகுடை சந்திர நிலவே

அண்ணன் தங்கை அன்புவளர் நிலவே
மண்ணில் வெறுப்புகள் மறைதேய் நிலவே

சைவ வைணவ சேர்க்கை நிலவே
கைவல்யம் தந்து காக்கும் நிலவே

http://temple.dinamalar.com/New.php?id=229

## பாண்டவதூதப்பெருமாள் - திருப்பாடகம் -காஞ்சிபுரம்

108 திவ்ய தேசங்கள் 45

பாண்டவனின் தூதாக பறந்துவந்த
கண்ணனே
ஆண்டவனாய் லீலைகள் அவதரித்து
செய்தவனே

பத்மாசன கோலத்தில் பதிந்த கண்ணனே
மத்தினால் கடைந்து மனத்திலமர்ந்த
கண்ணனே

நிலவறை துகளாக நிறைந்த கண்ணனே
உலகளந்த உருவத்தை உட்கார்ந்து
காட்டியவனே

திருப்பாடக திருத்தலத்தில் திருவருள்
கண்ணனே
திருத்தலத்தில் ஜனமேஜயருக்கு
திருஉருவம் தந்தவனே

உயரமாய் உன்னுருவம் உள்ளத்தில்
அமர்ந்திட
துயரங்கள் யாவும் தொலைந்து போகுமே

இங்கிருந்த படியே உன்னைநான் கண்டிட
எங்கும்பரவி நிற்கும் ஏகாந்த உருவமே

செல்லும் இடமெல்லாம் சிந்தையில்
கண்டேன்

அல்லும் பகலும் அகத்தினில் கண்டேன்

வழித்துணையாய் சாரதி வந்திடுவான்
நம்முடன்
அழியாத அருளில் ஆனந்தம் கொள்வோம்

http://temple.dinamalar.com/New.php?id=231

## பவளவண்ண பெருமாள்- காஞ்சிபுரம்
108 திவ்ய தேசங்கள் 46

செந்நிற வண்ணனாய் சிந்தைகவர்
கண்ணனே
பொன்னிற மங்கை பூமார்பில்
கொண்டவனே

பவள வண்ணனாய் பாவங்கள்
போக்குபவனே
குவளை மலர்வாய் கோபால பாலனே

பச்சை மாமலையாய் பாதை காட்டுபவனே
கச்சியில் இச்சுவை கனிவாய் தருபவனே

கோபத்தில் காலுதைத்த குறையைப்
பொறுத்தவனே
ஆபத்பாந்தனாய் கால்தடவிய அன்பு
சகாயனே

பார்வதிக்கு பாங்காய் பவள நிறத்தவனே
ஆர்வமூட்டும் பச்சையில் அழகாய்
நின்றவனே

ஒருபுறம் பசுமையாய் ஒருபுறம் பவளமாய்
இருவண்ண அழகாய் இத்தலத்தில்
நின்றவனே

பச்சையாய் நீலமாய் பவளமாய் ஆனவனே
உச்சத்தில் தெரியும் உயரிய வெண்மையே

சீதையின் இராமனாய் சிந்தை
கவர்ந்தவனே
ராதையின் கண்ணனாய் ரமித்து
நின்றவனே

எத்தனை ரூபங்கள் எத்தனை அவதாரங்கள்
அத்தனையும் கண்டேனென் அகத்தினில்
கண்டேன்

கண்ணைத் திறந்திட கஸ்தூரி திலகனைக்
கண்டேன்
கண்ணை மூடிட கார்மேக வண்ணனைக்
கண்டேன்

தேசங்கள் பலவற்றில் திவ்யமாய்
கண்டேன்
வாசமிகு வைகுண்டம் வையத்தில்
கண்டேன்

## பரமேஸ்வர விண்ணகரம்
## பரமபதநாதர் - காஞ்சிபுரம்

108 திவ்ய தேசங்கள் -47

நூற்றியெட்டு நாளாயென்னுள் நுழைந்த
கருவே
நூற்றியெட்டு தேசங்களில் நிறைந்த
உருவே

முத்தேவியர் பூவுலகில் முக்கிய
தவமிருக்க
இத்தலம் உருவாக ஈசனாய் வந்தாய்

ஆயகலைகள் அனைத்தும் அழகாய்
கற்பித்து
மாயலீலை புரிந்து மண்ணில் பிறந்தாய்

பக்தனைக் காக்க வடக்கில் படுத்தாய்
சக்தியை அளித்து சாகாவரம் கொடுத்தாய்

பல்லவ வம்சத்தில் பரமேஸ்வர வர்மன்
நல்லவனாய் பிறந்து நாடும் ஆண்டான்

வென்று வாகை சூடிய பறையொலி
நன்றாய் விண்ணதிர நாடும் செழித்திட

கற்பித்த ஆசானுக்கு கல்லிலே கோவில்
நற்செயல் புரிந்து நலமாய் கட்டினான்

மூன்று கோலத்தில் முதன்மையாய்
உன்னை

சான்றாய் இத்தலத்தில் சங்குடன்
வைத்தான்

நின்றும் அமர்ந்தும் கிடந்தும் இத்தலத்தில்
இன்றும் அன்றும் என்றும்நீ எழுந்தாய்

எண்ணத்தில் எழுந்து எழுத்தாய் மாறி
என்னுள் தினமும் எழிலாய் வருவாய்

நூற்றியெட்டு நாளாயென்னுள் நுழைந்த
கருவே
நூற்றியெட்டு தேசங்களில் நிறைந்த
உருவே

## கருணாகர பெருமாள் - திருகாரகம் - காஞ்சிபுரம்

108 தேவ்ய தேசங்கள் 48

உள்ளுக்குள் உள்ளாய் உறையும் கடவுளே
அள்ளிடும் கருணை அருளும் கடவுளே
எல்லாம் கடந்து எங்குமுள்ள கடவுளே
சொல்லி மாளாத சுந்தர கடவுளே

கோவிலின் உள்ளே கோவில்கொண்ட கடவுளே
ஆவியின் உள்ளே ஆன்மாவான கடவுளே
பாவிக்கும் பரகருணை பாரிலருளும் கடவுளே
தாவியே கடந்து தாரணிஅளந்த கடவுளே

சில்லென்று தென்றலாய் சிலிர்ப்பூட்டும் கடவுளே
கல்வியை கற்பிக்கும் கருணாகர கடவுளே
துல்லிய உண்மை தூயமலர் கடவுளே
அல்லும் பகலும் அணைக்கும் கடவுளே

நான்கு தலமாய் நாற்புறம்சூழ் கடவுளே
நான்மறை சொல்லிடும் நாராயண கடவுளே
வான்வரை விரிந்த வாசுதேவ கடவுளே
ஏனென்ற கேள்விக்கு எழிலானவிடை கடவுளே

http://temple.dinamalar.com/New.php?id=1077

## பார்த்தசாரதி பெருமாள் -சென்னை
108 திவ்ய தேசங்கள் 49

பக்தனுக் கருளும் பார்த்த சாரதியே
பக்கத்தில் நிற்கும் பரந்தாம சாரதியே

தருமம் நிலைத்திட தேரோட்டிய சாரதியே
கருமம் கண்ணாக கண்ணனான சாரதியே

கம்பீரம் வழிந்திட கருமீசை சாரதியே
அங்கத்தில் வடுவாங்கி அழகூட்டும்
சாரதியே

சர்க்கரை பொங்கலில் சங்கமிக்கும்
சாரதியே
தற்கால தருமத்தை தந்துநிற்கும் சாரதியே

சத்தமில்லா மணியுடன் சங்குமுழங்கும்
சாரதியே
சக்கரமில்லா நண்பனாய் சரித்திரமான
சாரதியே

முனிவரும் யோகியரும் முன்வணங்கிய
சாரதியே
இனிவரும் காலத்தில் எல்லையில்லா
சாரதியே

பாரதியும் பாரதிர பாடிய சாரதியே
மாறாத கோலத்தில் மனம்கவர் சாரதியே

சென்னை மாநகர் சேவிக்கும் சாரதியே
அன்னை வேதவல்லியுடன் அருள்தரும் சாரதியே

குடும்ப சகிதமாய் கோலம்கொண்ட சாரதியே
விடுவித்து பற்றறுக்கும் வினயமான சாரதியே

கீதையை அருளிய கிருஷ்ண சாரதியே
சீதைக்கருகில் ராமனாய் சிறந்த சாரதியே

http://temple.dinamalar.com/New.php?id=498

## பேரருளாளன் - செம்பொன்செய் கோவில்- நாகப்பட்டினம்

108 திவ்ய தேசங்கள் 50

அருள்விழி கண்டதில் அன்றுஅரனும் மயங்கிட
உருவம் பதினொன்றாய் உருவான அதிசயமே

திருநாங்கூர் தலங்களில் திருவருள் தருபவனே
திருப்பதி பதினொன்றாய் திக்கெங்கும் வீற்றவனே

செம்பொன் செய்கோவில் செம்மலர் ரங்கனே
தம்பழி தான்அகல தவமிருந்த ராமனே

பொன்னால் செய்த பேரெழில்பசு தயாளனே
அந்தணர் பெற்றிட அருளிய பேரருளாளனே

இராது இருந்தருளும் இனிய அண்ணலே
இராவணன் இல்லாதழித்த இராம பிரானே

இல்லாது வாடுவோருக்கு எடுத்துக் கொடுப்போனே
சொல்லினால் துதித்தால் செல்வம் அளிப்போனே

மூன்று தினங்களில் முப்பத்திரெண்டாயிர நாமமே
சான்றாய் நிற்கும் சங்குசக்கர நாராயணனே

http://temple.dinamalar.com/New.php?id=267

## வரதராஜ பெருமாள் - திருமணிக்கூடம்- நாகப்பட்டினம்
108 திவ்ய தேசங்கள் 51

மணிக்கூட நாயகனே மணிமண்டப
பெருமாளே
அணிகலன் பூண்டவனே அருமறை
பெருமாளே

கோவிலின் உள்ளே கொலுவான பலிபீடமே
சோபிக்கும் அழகுடன் சுந்தர மண்டபமே

கிழக்கு நோக்கிய கீர்த்திமிகு பெருமாளே
முழங்கு சங்குடன் முன்னின்று நின்றாயே

அபயம் காட்ட அருளுமுன் கரங்களே
உபய வரதராஜர் உள்ளுக்குள் நின்றாயே

வலப்புறம் ஸ்ரீதேவி இடப்புறம் பூதேவியாய்
மலரும் தாமரை மணாள வடிவனே

சந்திரன் தேய்ந்திட சாபம் கொண்டானே
அந்தியில் தினமும் அவனும் தேய்ந்தானே

சாபத்தை போக்கிட சரணம் அடைந்தானே
ஆபத்தை நீக்கிய ஆண்டவ பெருமாளே

மணிக்கூட நாயகனே மணிமண்டப
பெருமாளே
அணிகலன் பூண்டவனே அருமறை
பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=251

## காவளம்பாடி கோபால கிருஷ்ணன் - திருநாங்கூர்

108 திவ்ய தேசங்கள் 52

காவளம்பாடியில் கால்வைத்த கருமேனி
கிருஷ்ணனே
பாவளம் பொருந்தி பாடவைக்கும்
கிருஷ்ணனே
கோவிலில் குடிகொண்ட கோபால
கிருஷ்ணனே
தாவி குதித்தாடிடும் தாண்டவ கிருஷ்ணனே

பாரிஜாதப் பூவினை பாரினில்நட்ட
கிருஷ்ணனே
தேரிலே விஜயனுக்கு தெளிவுதந்த
கிருஷ்ணனே
பாமாவின் அன்பனாய் பக்தர்காண
கிருஷ்ணனே
பூமாவின் நாயகன் பொற்றாமரை திருமாலே

விஷ்வக்சேனர் கண்டிட விண்ணவர்
மன்னனே
விஷ்வரூபம் எடுத்த விளையாட்டு
கண்ணனே
சினம் கொண்ட சிவனுக்காய் வந்தவனே
இனம் காத்து இதமாய் நின்றவனே

ஆடும் நெற்கதிரில் ஆழ்வாராய் வருபவனே
பாடும் பாடலுக்கு பாலகனாய் வருபவனே
தேடும் விழிகளுக்கு திவ்யமாய் தெரிபவனே
வாடும் மனதிற்கு வசந்தம் தருபவனே
http://temple.dinamalar.com/New.php?id=247

## பரிமள ரங்கநாதர் திருக்கோவில் திரு இந்தளூர் மாயவரம்

108 திவ்ய தேசங்கள் 53

பாற்கடலில் பள்ளி கொண்ட பரிமளமே
போற்றி பாடும் புகழுடை பாரிஜாதமே

விரதம் காத்திடும் வெண்ணிற தும்பையே
துறவியும் நடுங்கி துதித்த தாமரையே

அன்றாடம் பூத்திடும் அல்லி மலரே
துன்பங்கள் போக்கிடும் தூயதொரு
துளசியே

அம்பரீஷன் ஏகாதசிக்கு அருளிய
குறிஞ்சியே
இம்மைக்கும் மறுமைக்கும் ஏகாந்த
குவளையே

வித்தாய் புதைந்து விரிந்த ஞாழலே
சித்தத்தில் அமர்ந்த சிருங்கார சிந்துவே

நித்தம் பூத்திடும் நிர்மல நெய்தலே
புத்தம் புதிதாய் பூரிக்கும் புன்னையே

மூடிய கண்ணுக்குள் முளைத்திடும்
கருவிளையே
பாடிய பாடலில் பரவசமான பகன்றையே

என்னவென்று அழைப்பேன் எப்படி
பாடுவேன்
கண்ணில் தெரிவதெல்லாம் கடிமலர்
காஞ்சியே

http://temple.dinamalar.com/New.php?id=316

https://ta.m.wikipedia.org/wiki/சங்ககால_மலர்கள்

## கோவிந்தராஜ பெருமாள் - சிதம்பரம்
108 திவ்ய தேசங்கள் 54

நடனமாடும் சிவபார்வதி நந்த்தனம்கண்ட
பெருமாளே
சுடராய் எழுந்தருளிய சித்திரகூடப்
பெருமாளே

பாற்கடலில் பள்ளிகொண்ட பால்வண்ண
பெருமாளே
தேர்மேல் பவனிவந்த கார்வண்ண
பெருமாளே

சித்திரகூடத்தை தெற்கிலமைத்த
நீலவண்ண பெருமாளே
பத்திரமாய் படுத்த பச்சை
மாமலைபெருமாளே

நாபியில் பிரம்மன் நிற்பதால்
சிவந்தபெருமாளே
சோபிக்கும் வானவில்லாய் சௌந்தர்ய
பெருமாளே

மண்டபத்து வாயிலில் முத்தேவர்
பெருமாளே
கண்கொள்ளா காட்சியை காண்போம்
பெருமாளே

கால்தூக்கி சிவனாட காணும் பெருமாளே
தாள்பணியும் எமக்கு தாரும்
காருண்யபெருமாளே

கோவிலில் கொலுவிருக்கும் கோவிந்தராஜ
பெருமாளே
தேவியின் சகோதரன் தெய்வீக பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=443

## அழகிய மணவாளர் -உறையூர் தஞ்சாவூர்

108 திவ்ய தேசங்கள் 55

உறையூரில் உறைகின்ற உத்தமா போற்றி
மறைகள் போற்றும் மாதவா போற்றி

நங்க சோழ மன்னனின் நங்கை மணவாளா போற்றி
மங்காத வீரத்துடன் மாகுதிரையில் வந்தவா போற்றி

கமலவல்லித் தாயாரை கடிமணம் செய்தவா போற்றி
விமலனாய் உலகை விரிந்து அளந்தவா போற்றி

திருமணத் தடைகளை தகர்த்திடும் தேவா போற்றி
திருமகளை மண்ணில் திருமணம் செய்தவா போற்றி

பங்குனி மாதத்தில் பார்க்கவரும் ரங்கா போற்றி
அங்கத்தில் திருமகளை அணியாய் அணிந்தவா போற்றி

மாப்பிள்ளை கோலத்து மணவாளா போற்றி
காப்பதை கடனாய் கொண்டவா போற்றி

நினைவாய் என்னுள் நிற்கும் உண்மையே
போற்றி
வினையாய் மறதியையும் விதைக்கும்
வித்தகா போற்றி

எடுத்த காரியம் எல்லாமாய் ஆனவனே
போற்றி
தடுக்காது என்னுள் தமிழாக வருவாய்
போற்றி

http://temple.dinamalar.com/New.php?id=168

## திருநறையூர் நம்பி - நாச்சியார் கோவில்

108 திவ்ய தேசங்கள் 56

நம்பினார்க் கருளி நாடினாரைக் காப்பவனே
அம்பலத்தில் முத்ராதானம் ஆழ்வாருக் களித்தவனே

முன்தள்ளி சக்கரம் முத்ராதான ஆசார்யனே
பின்திரும்பிய சங்குடன் பீதாம்பர அழகனே

திருமங்கை ஆழ்வாரை திருக்கோலத்தில் வந்து
திருவைணவ உருவ திருவருள் தந்தவனே

சாவிக்கொத்துடன் தாயார் சாரமுடன் நின்றாளே
கோவிலில் இடம்கொண்டு குலங்களைக் காப்பவளே

கல்கருட சேவைக்கு காத்திருக்கும் பலரே
எல்லார் தோளிலும் எழிலாய் வருபவரே

அரியும்அரனும் ஒன்றேயென்று ஆங்கே சொன்னவனே
அரியவைகுண்டம் நாயனாருக்கு அருளித் தந்தவனே

வஞ்சுளா தேவியை வையத்தில் மணந்தவனே

அஞ்சல் என்றே அனைவரையும்
காப்பவனே

நம்பினார்க் கருளி நாடினாரைக் காப்பவனே
அம்பலத்தில் முத்ராதானம் ஆழ்வாருக்
களித்தவனே

## நாவாய் முகுந்தன் நாராயணன்-கேரளா

108 திவ்ய தேசங்கள் 57

நாவால் நான்பாடிட நாவாய் நாராயணா
பூவால் அர்ச்சிக்கபட்ட பூலோக நாராயணா
கஜேந்திரனுக் கருள கருணைகொண்ட
நாராயணா
மகேந்திரனாய் மண்தின்ற மதுசூதன
நாராயணா

பூப்பறிக்க வேண்டாமென பூமகளிடம்
சொன்ன நாராயணா
காப்பதே கடனென்று காவல் புரியும்
நாராயணா
பக்தனுக்காய் தாமரையை
மகாலக்ஷ்மிவிட நாராயாணா
சக்கரத்தால் காத்த சங்குமுழங்கும்
நாராயணா

நவயோகி தவமிருக்க நலம்தரும்
நாராயணா
சுபயோக தனமாய் சுகம்தரும் நாராயணா
நலம்தரும் சொல்லாய் நாவில்அமர்
நாராயணா
குலம்காத்து குறைநீத்து கோவில்கொள்
நாராயணா

நாராயணா நாராயணா நாராயணா நாராயணா

http://temple.dinamalar.com/New.php?id=108

## உய்யவந்த பெருமாள்- திருவித்துவக் கோடு - பாலக்காடு

108 திவ்ய தேசங்கள் -58

உய்ய வந்த பெருமாளே ஓங்காரதார
பெருமாளே
அய்யனாய் நின்ற பெருமாளே அகிலம்
காக்கும் பெருமாளே

பஞ்ச பாண்டவ பெருமாளே பாஞ்ச ஜைன்ய
பெருமாளே
பஞ்ச மூர்த்தி பெருமாளே பாஞ்சாலி அன்பு
பெருமாளே

அஞ்ஞாதவாச தல பெருமாளே ஆரண்ய
வாச பெருமாளே
அஞ்ஞானம் போக்கும் பெருமாளே
அசைந்தாடு மயில் பெருமாளே

காசி விஸ்வநாத பெருமாளே கால் நடந்து
வந்த பெருமாளே
மாசில்லாத ஏக வடிவ பெருமாளே
மாறுபாடில்லாத பெருமாளே

அரியாகி அரனான பெருமாளே
அறிந்தவரும் அறியாத பெருமாளே
விரிந்த வானான பெருமாளே
விளையாட்டாய் காணாத பெருமாளே

பாலக்காடு பாதைகாத்த பெருமாளே
பார்க்கும் இடமெல்லாம் ஆன பெருமாளே
ஆலவிழுதாய் உருவாகும் பெருமாளே
ஆதியந்தமான ஆச்சார்ய பெருமாளே

என்னுள் உள்ள பெருமாளே எண்ணத்தில்
வரும் பெருமாளே
எண்ணிக்கை இல்லா பெருமாளே
எழில்வடிவ ஏகாந்த பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=113

## சவுரிராஜ பெருமாள் - திருக்கண்ணபுரம்

108 திவ்ய தேசங்கள் 59

மன்னருக்கு சூட்டிய மாலையில்
தலைமுடியிருக்க
கண்ணபுர நாயகனை காத்திட
வேண்டினாரே
பக்தனைக் காக்க பரந்தாமன் தன்தலையில்
சிக்கென்று முடிதாங்கி சிகையுடன்
நின்றாரே

அழகான கேசத்துடன் அமாவாசை
ஊர்வலமே
பழகிய கோலத்தில் பிரயோக சக்கரமே
கருடனின் கர்வத்தை கணநேரத்தில்
அழித்தவரே
தருணத்தில் அருளி தரணியைக் காப்பவரே

வறுமையில் வாடி வரிகட்ட மறந்த பக்தர்
கருணா மூர்த்திக்கு கைங்கர்யம் செய்தாரே
குறுநில அம்மன்னரை கோவிலில்
காத்தவரே
பருப்புடன் செய்த பொங்கலை உண்டவரே

அனைவரையும் காக்கும் ஆண்டவ
உருவமே
முனையதரன் பொங்கலை முன்னின்று
செய்வோமே

நெற்றியில் தழும்புடன் நின்றெழுந்த
உருவமே
வெற்றியை அளிக்கும் வீரஅஷ்டாச்சர
மந்திரமே

ஓம் நமோ நாராயணாவே
ஓம் நமோ நாராயணாவே
ஓம் நமோ நாராயணாவே
ஓம் நமோ நாராயணாவே

http://temple.dinamalar.com/New.php?id=246

**சவுந்தரராஜப் பெருமாள்-**
**நாகப்பட்டினம்**
108 திவ்ய தேசங்கள் 60

அழகுக்கு அழகு சேர்க்கும் அழகே
அழகுக்கு அணியாகி அசையும் அழகே

எழிலாய் எழுந்தருளும் எண்ணிலா எழிலே
மயிலாட மனம்கவரும் மந்தகாச எழிலே

துருவன் கண்டிட துயர்துடைக்கும் தளிரே
உருவத்தைக் கண்டதும் உள்ளமும் உருகுமே

வரங்களை மறந்து வணங்கி நின்றானே
கரங்கள் கூப்பி கண்குளிர கண்டானே

பேரழகை எப்போதும் பார்க்கும் வரமே
தாரணி காத்திட தரிசனம் தருவாயே

சுந்தர உருவமான சவுந்தர ராஜனே
மந்திர குழலூதி மயக்கும் மாயனே

அவதார கதையை அணியாக்கிய அணியே
அவதார புருஷனாய் ஆதியான அந்தமே

http://temple.dinamalar.com/New.php?id=249

## நாண்மதியப் பெருமாள் - தலச்சங்காடு நாகப்பட்டினம்

108 திவ்ய தேசங்கள் - 61

திருமகளுக்கு முன்னதாக தோன்றிய
சந்திரனே
உருவத்தில் அழகாக உதித்த சந்திரனே
குருவின் மனைவியை கூடிய தோஷமே
உருவத்தைக் குலைக்க உருவான
குஷ்டமே

ரோகிணி மீதுமட்டும் ரம்மியம் அதிகமாக
ஆகிவந்த சாபத்தில் அனுதினம் தேயுமே
தேகத்தின் சோபை தினமும் குறையவே
மோகத்தின் சாபம் முடியசெய் தவமே

சந்திரன் தவத்திற்கு சக்தியுடை தலமே
மந்திரங்கள் ஓதும் மறைபுகழ் மாலனே
மதியைத் தலையில் மலராய் சூடியவனே
கதியாய் எங்களைக் காத்து நிற்பவனே

சங்கோடு சக்கரம் சாரங்க நாதனே
மங்காத ஒளியே மாறாத ஒலியே
விரிந்த வெண்சுடரே விண்ணின்
ஒளிச்சுடரே
புரியாத தத்துவமே புன்னகை பாலனே

http://temple.dinamalar.com/New.php?id=269

**திரிவிக்கிரம நாராயணர் - சீர்காழி**
108 திவ்ய தேசங்கள் -62

வலக்கை தானம்பெற இடக்கை
குடைபிடிக்க
உலகை காத்த உத்தம வராகவதாரமே
காலிலே தண்டையுடன் கையில்
வேலுடன்
பாவிலே குறளுடன் பாடிய
திருமங்கையாழ்வாரே

நிலத்தினைக் காத்திட நிம்மதி பெற்றிட
உலகை அளந்த உத்தம திரிவிக்ரமனே
இடதுகால் தலைமேல் இருக்க,
வலக்கை
தடயமாய் பெறும் தானங்கள் சுமக்க

இடதுவிரல் எங்கே இன்னொரு
அடியென
திடமாய் கேட்டுநிற்கும் திவ்ய
புருஷனே
தவிட்டுப் பானையில் தாடாளன் இருக்க
கவிபாடும் ஆழ்வார் கனவிலே
வந்தவரே

திருஞான சம்பந்தர் திருமங்கை
ஆழ்வார்

திருவாத விளையாட்டை
திருத்தலத்தில் நடத்தியவரே
முனிவர் உரோமசர் முன்னின்று
கண்டிட
கனிவாய் பிரம்மனின் கர்வம்
போக்கியவரே

இதுவேண்டும் அதுவேண்டும் எல்லாம்
வேண்டுமென
மதிகெட்டு திரியும் மானுடம் உணரவே
தாள்ஆண்டு தரணியாண்டு தலைக்கனம்
போக்கியவனே
கால்தூக்கி கரம்உயர்த்தி கர்வம்
அடக்குபவரே

தூக்கிய பாதம் தொய்வடையா திருக்க
ஆக்கும் புருஷனை அங்கத்தில்
தாங்கியவளே
மகாலக்ஷ்மி அன்னையின் மார்பிலே
திருமாலே
சுகானுபவ சங்கமத்தில் சுந்தர
நாயகனே

http://temple.dinamalar.com/New.php?id=268

**வைகுண்ட விண்ணகரம் - நாகப்பட்டினம்**

108 திவ்ய தேசங்கள் -63

விண்ணகர வைகுண்டம் வையத்தில் உண்டு
கண்கவர் தேவியருடன் கடவுளும் உண்டு

அன்பான தம்பதிகள் ஆண்டவனைத் தேடியதுண்டு
தன்பல வலிமையில் தவமும் இருந்ததுண்டு

நாட்டை ஆண்டுவிட்டு நற்காரியம் செய்ததுண்டு
காட்டிலே தீமூட்டி கடுந்தவம் செய்ததுண்டு

பூதவுடல் களைந்து பொன்னகரம் வந்ததுண்டு
மாதவனைக் காணாது மனமுடைந்து போனதுண்டு

அரசன் ஸ்வேதகேது ஐராவதேஸ்வரனை அணுகியதுண்டு
கரம்கூப்பி நாராயணனைக் காணவே நின்றதுண்டு

உதங்க முனிவரும் உடன் வந்ததுண்டு

வதனம் கண்டிட வாய்ப்பும்
பெற்றதுண்டு

தேவியர் இருவரும் தெய்வத்துடன்
தோன்றியதுண்டு
கோவிலில் விஷ்ணுவின் கோலம்
கண்டதுண்டு

தானங்கள் யாகங்கள் தருமங்கள்
பெருகியதுண்டு
வானமே மண்ணில் வரைபடமாய்
வந்ததுண்டு

விண்ணகர வைகுண்டம் வையத்தில்
உண்டு
கண்கவர் தேவியருடன் கடவுளும்
உண்டு

http://temple.dinamalar.com/New.php?id=360

**செங்கண்மால் ரங்கநாதர் - திருத்தெற்றியம்பலம்**
108 திவ்ய தேசங்கள் -64

கண்சிவந்து களைப்பில் கண்ணயரும்
ரங்கனே
மண்செழிக்க சயனித்து மனம்கவரும்
ரங்கனே

அசுரனை அழிக்க அவதாரமெடுத்த
ரங்கனே
பசுவின் உருவான பத்தினிகாத்த
ரங்கனே

வராக வடிவில் வையம்காத்த ரங்கனே
அராஜகம் அழிக்க அடிக்கடிவரும்
ரங்கனே

தனியே இலக்குமி தவிக்காதிருக்க
ரங்கனே
இனிதே தவமிருக்கவைத்து
இத்தலம்வந்த ரங்கனே

பக்தர்கள் கண்டிட பள்ளிகொண்ட
ரங்கனே
முக்தியைத் தந்திடும் முகுந்த ரங்கனே

அம்பலம் வந்தெம்மை ஆண்டுவிடும்
ரங்கனே

இம்மைக்கும் மறுமைக்கும் இனிதான ரங்கனே

திருத்தெற்றி அம்பல திருமால் ரங்கனே
திருமகள் துணையுடன் திருவருள் ரங்கனே

http://temple.dinamalar.com/New.php?id=306

**தாமரையாள் கேள்வன்- பார்த்தன் பள்ளி**

108 திவ்ய தேசங்கள் -65

தண்ணீர் வேண்டியே தவத்தை
கலைத்தானே
கண்களை அகத்தியர் கனிவுடன்
திறந்தாரே
கமண்டலம் திறக்க காணாத தண்ணீரே
விமலன் உன்னையே வேண்ட
சொன்னாரே

கண்ணனை வேண்டி கண்களை
மூடவே
கண்எதிரே தோன்றினான் காட்சியும்
தந்தான்
மண்ணை எங்கு மனமார
தோண்டினாலும்
தண்ணீர் கிடைக்க தந்தான் கத்தியை

மண்ணை தோண்டிட மகத்தான கங்கை
விண்ணில் இருந்தே விழுந்து புரள
தாகமும் தீர்ந்து தளிரடி பணிவானே
சோகங்கள் தீர்க்கும் சுந்தர கண்ணனே

மகனாய் பிறப்பது மகானே என்று
அகத்தில் அறிந்தான் அரசன் தசரதன்
சோதிக்க யாகமும் சுகமாய் நடத்த

ஆதியாய் தோன்றிய அதிசய ராமனே

தேவியர் இருவருடன் தோன்றிய
ராமனே
மேவிய உருவில் மேன்மை பொங்குமே
யுகங்கள் கடந்து யோகங்கள் கடந்து
அகத்தில் தெரிந்திடும் அத்வைத
ரூபனே

இராமனாய் கண்ணனாய் இராசங்கள்
செய்பவனே
கோமளக் கேள்வனாய்
குலக்கொழுந்தாய் ஆனவனே
பார்த்தன் பள்ளியில் பார்ப்பதற்கு
நின்றவனே
கோர்த்த மாலையில் கோலமிடும்
தேவனே

http://temple.dinamalar.com/New.php?id=253

## தேவநாத பெருமாள் - திருவகிந்திபுரம் (கடலூர்)
108 திவ்ய தேசங்கள் -66

கருடன் கொணர்ந்த கருடநதி பெருமாளே
கருவத்தை அழித்துதேவர் காத்த பெருமாளே

ஆதிசேடன் வாலால் அடித்தஆழ்கிணறு பெருமாளே
ஓதிடும் மறைகள் உன்புகழ்பாடும் பெருமாளே

தேசிகன் வாழ்ந்த திருமாளிகை பெருமாளே
பூசிடும் சிவப்பில் பொங்கியநதி பெருமாளே

உடல்நோய் தீர்க்கும் ஒய்யாரமூலிகை பெருமாளே
கடலூரில் விழுந்த சஞ்சீவமலை பெருமாளே

வேண்டுதல் தாங்கிடும் வாசக்கிணறு பெருமாளே
ஆண்டவ மூர்த்தியாய் ஹயக்ரீவ பெருமாளே

வலதுதொடையில் லக்ஷ்மியை வாகாய்கொண்ட பெருமாளே
உலகத்தை காத்திட ஊரில் வாசம்செய் பெருமாளே

உருவத்தில் மும்மூர்த்திகளை உணர்த்திய பெருமாளே
திருவகிந்தி புரத்து தேவநாத பெருமாளே
http://temple.dinamalar.com/New.php?id=499

## காட்கரையப்பன் - எர்ணாகுளம் கேரளா

108 திவ்ய தேசங்கள் 67

உருவத்தில் பாலகனாய் ஓங்கி வளர்ந்தவனே
தருணத்தில் வந்து கர்வத்தை அடக்கியவனே
குழந்தை வடிவில் குலம்காத்த அப்பனே
அழகிய வாமனனாய் அரசனை அளந்தவனே

பகைவரின் கொடுமை படாதுகுடை
பிடித்தவனே
வகையாய் தண்டத்தை வாகாய் ஏந்தியவனே
எழிலான மூன்றடியில் எழுந்த
விஸ்வரூபமே
அழியாத பாதங்கள் அண்டம் அளந்ததுவே

அங்கே வளர்ந்த அதிசய உருவமே
எங்கே மூன்றாவதடி என்றே வினவ
இங்கே என்தலை என்றவன் சொல்லிட
மங்காத பெருமை மன்னனும் கொண்டானே

மகாபலியின் சிவபக்திக்கு மகேசனுக்கு
கருவறையே
மகாபலி திருவோணத்திற்கு மறுபடிவரும்
திருநாளே
சிவனும் திருமாலும் சேர்ந்தருள் தலமே
அவனியில் பழம்பெரும் ஆலய தலமே

http://temple.dinamalar.com/New.php?id=694

## லெட்சுமண பெருமாள் - திருமூழிக்களம் - எர்ணாகுளம்

108 திவ்ய தேசங்கள் 68

கரங்கள் நான்குடன் கருணை பொழிபவனே
வரங்கள் பலவுடன் வளங்கள் தருபவனே

சகோதரர் நான்குடன் சரித்திரம்
படைத்தவனே
மகோன்னதம் பலவுடன் மாளிகை
துறந்தவனே

பரதனைக் கண்டு பரிதவித்த லட்சுமணன்
சிரம்தாழ வணங்கிய சிறந்த பெம்மானே

கண்ணன் வணங்கிய காணாத விக்ரகமே
கனவிலே வந்து கரையோரம் பதித்தனரே

திருச்சூர் இராமர் திருப்பறையார் கோவிலே
இருக்கும் தலத்து இரிஞ்சிலாக்குடா
பரதனே

பாயமல் கோவிலில் பார்போற்றும்
சத்ருக்னனே
ஓயாத உலகின் ஒய்யார
எர்ணாகுளலட்சுமணனே

எல்லோரும் உனையடைய எளிதாய்
வழிகூற
சொல்லாய் ஹரிதருக்கு சொன்ன
திருமொழியே

திருமொழிக் களத்தான் திருமூழிக் களத்தானாக
ஒருமொழியில் உன்புகழை உரைக்கத்தான் இயலுமோ

எர்ணாகுள இறைவனை என்நாபுகழ் பாடுமே
எர்ணாகுள இறைவனே என்குலம் காப்பானே

http://temple.dinamalar.com/New.php?id=107

## திருவாழ்மார்பன் - பந்தனம் திட்டா - கேரளா

108 திவ்ய தேசங்கள் -69

திருவை மார்பில் தாங்கிய திருவே
திருமார்பு தரிசனம் ஆதிரை திருவே
பிரம்மச்சாரி விரதம்கடை பிடிக்கும் திருவே
வரங்களை அள்ளி வழங்கும் திருவே

சங்கரமங்கல அம்மைக்கு சங்கடம் தீர்த்த திருவே
மங்கல விசுவுக்கு மங்கையர் காணும் திருவே
பெண்களை அனுமதிக்காத பெரியகோவில் திருவே
கண்குளிர திருமார்பு காணஅனுமதிக்கும் திருவே

திருவாதிரை நாளிலும் திருவிசுநாளிலும் திருவே
திருநடன கதகளி திருஉற்சவ திருவே
உப்பு மாங்காயை உண்ட அழகு திருவே
தப்பாது பக்தர்களை தாங்கும் திருவே

உன்னைக் காணசிவன் ஓடிவந்த திருவே
சந்தனத்துடன் விபூதி தந்திடும் திருவே
பந்தன திட்டாவில் பாதுகாக்கும் திருவே
சொந்தங்களைக் காத்து சுகம் தருவாய் திருவே

http://temple.dinamalar.com/New.php?id=110

## இமையவரப்பர் - திருச்சிற்றாறு - ஆலப்புழா
108 திவ்ய தேசங்கள் -70

ஊரிலே தருமர் ஒருபொய் சொல்லிவிட
போரிலே துரோணர் புத்ரசோகம்
கொண்டார்
இறந்த யானையின் இனிய பெயரை
உரக்க சொல்ல உண்மை மறைந்ததே

தான் செய்த தவற்றினால் தருமர்வாட
வான்வெளி தேவர் வாழ்த்திய இத்தலத்தை
கண்டு கொண்டு கண்மூடி தவமிருந்தார்
மண்ணிலே திருமாலை மனம்குளிர
வேண்டினார்

திருச்சிற்றாறு அருகே திருச்செங்குன்றூர்
அமைய
திருமாலே இவ்விடத்தில் திருவருள் புரிய
ஆலப்புழா ஊரிலே அமைந்த அதிசயமே
கோலமாய் வீற்ற குருவாயூர் கோவிந்தா

எத்தனை தேசங்கள் எத்தனை உருவங்கள்
பித்தனாய் மாற்றியே பிறவியை காப்பாயே
உத்தமன் உன்புகழை ஓயாது நான்பாட
நித்தம் எனக்கருளி நிம்மதி தருவாயே

http://temple.dinamalar.com/New.php?id=105

## மாயப்பிரான் - திருப்புலியூர் - ஆலப்புழா

108 திவ்ய தேசங்கள் -71

மாயமாய் வந்து மாயைகளை நடத்துபவரே
மாயப் பிரானாய் மாட்சிமையுடன் நின்றவரே
தீராத நோய்களைத் தீர்க்கும் நாதரே
கோரிய முனிவர்களுக்கு கோலமாய் வந்தவரே

சப்த ரிஷிகளை சாபத்தால் அவமதிக்க
தப்பிதவழியில் கொன்றிட தேவதை உருவாக்க
தானம் செய்யாது தவமுனிவரை வருத்த
வானத்து இந்திரன் வந்தானே புலிவடிவில்

பீமன் கட்டிய பெரிய கோவிலே
பீமன் தூக்கிய பெரிய கதையே
குட்ட நாடு தலத்தில் கோவில் கொண்டவரே
எட்ட முடியா உருவத்தை எழிலாய் கொண்டவரே

எல்லாமே மாயையாய் எல்லாமாய் இருப்பவரே
இல்லாத பொருளிலும் இருந்து ஜொலிப்பவரே
உருவமாய் அருவமாய் உள்ளதாய் இல்லாததாய்
கருத்தாய் புத்தியாய் கல்வியாய் ஆனவரே

http://temple.dinamalar.com/New.php?id=109

## திருக்குறளப்பன் - பந்தனம் திட்டா
108 திவ்ய தேசங்கள்-72

வேதங்களை தொலைத்த வேளையில்
காத்தவரே
வேதங்களை மீட்டு விரைவில் தந்தவரே
நன்றியில் பிரம்மன் நாடியுன்னை தொழுதிட
அன்று அருளிய அப்பன் சாரதியே

சக்கரம் அழுந்தியதால் தரையிறங்கிய
கர்ணனை
அக்கணமே அர்ஜுனன் அம்புதாக்கி கொல்ல
போரின் தருமத்தில் பெரும்பாவம்
செய்தேன்என்று
பாரில் வருந்தியவனுக் கருளிய
பார்த்தசாரதியே

ஆயுதங்கள் மறைத்த அந்த வன்னிமரமே
பாயும் ஒளியைப் பாரினில் பரப்புமே
நோய்களை அகற்றும் நெடிய மரமே
காய்களை சுற்றி அடிக்க மருந்தாகுமே

வாழ்வென்னும் வழியில் வளைவும் சுளிவும்
தாழ்வும் உயர்வும் தடுமாற வைக்குமே
என்றும் ஏறியிறங்கும் ஏணிப்படிகளே
இவ்வுலகில்
உன்நினைவு மட்டுமே ஓயாத உண்மையே

http://temple.dinamalar.com/New.php?id=112

## பாம்பணையப்பன் - ஆலப்புழா திருவண்வண்டூர்

108 திவ்ய தேசங்கள் -73

பாம்பணைமேல் பள்ளிகொண்ட பாற்கடல் வாசனே
பாம்பணை அப்பனாய் பம்பைகரை நேசனே
நகுலனால் புதுபிக்கப்பட்ட நல்லதொரு கோவிலே
மகுடமாய் திருவண் வண்டூரில் நின்ற மதுசூதனே

பிரம்மனும் நாரதரும் பேச்சிலே சண்டையிட
பிரம்மன் நாரதரை சபித்துவிட்ட சாபமே
சாபங்கள் போக்கவே சரித்திரம் படைக்கவே
கோபங்கள் தணியவே கோவிலுக்கு செல்வோமே

ஞானத்தை கேட்டு ஞாலத்தில் தவமிருக்க
வானத்து விண்ணவனை வாழ்த்தி பாடினாரே
நாலாயிரப் பாடல்களை நாரதரும் நவின்றிட
நாலாயிர பாடல்கள் நாரதீயப் புராணமே

காளிங்க நர்த்தன கண்ணனும் கண்குளிர
ஆலிங்கம் செய்யும் ஆண்டவ ஆலப்புழாவே
சுடராய் ஒளிகாட்டும் கருவறை வட்டமே
இடர்களை போக்கிடும் இனியதொரு தலமே

http://temple.dinamalar.com/New.php?id=111

## அனந்த பத்மநாபர் -திருவனந்தபுரம்
108 திவ்ய தேசங்கள் -74

அனந்தகோடி மக்களுக்கு ஆனந்தம்தரும்
பத்மநாபனே
அனந்த சயனத்தில் ஆதிசேடன் மடியில்
அயர்ந்தவனே

இலுப்பையில் செய்யப்பட்ட இயல்பான
விக்ரகமே
உலுக்கிடும் நெருப்பில் உதிரியான
அதிசயமே

கடுசர்க்கரை யோகத்தில் கல்லாலான
சாளக்கிராமமே
சுடும்வெயிலிலும் உருகாத
சுவைவெண்ணெய் கலவையே

பதினெட்டடி நீளமுடைய பத்மநாப சுவாமியே
பதித்த தங்கத்தில் பத்திரமான ஸ்வரூபமே

வில்வமங்கலத்து சாமியாரிடம்
விளையாடிய சின்னக்கண்ணனே
எல்லாம் அறிந்தும் எளிதில் மறைந்த
உண்ணிக் கண்ணனே

துறவுக்கும் பக்திக்கும் தூய்மையான
பொறுமை தேவை
உறவாடி உரையாடி உணர்த்திய உயரிய
தேவனே

தேடித்தேடி உன்னைக்காண தினம் சுற்றி
அலைந்தாரே
சூடிய மலருடன் சுந்தரதேவியுடன்
காற்றினில் பள்ளிகொண்டீரே

அனந்தன் காட்டிலே அரவணைத்த அண்ணல்
கேசவனே
கனத்த காட்டிலே கருணை வடிவமாய்
கோவில் கொண்டவனே

http://temple.dinamalar.com/KoilList.php?cat=8

## ஆதிகேசவ பெருமாள் -திருவட்டாறு -கன்னியாகுமாரி
108 திவ்ய தேசங்கள்-75

கேசனை அழித்து கேசியின்மேல்
கிடந்தவனே
வாசமிகு பத்மத்தில் வாகாய்
அமைந்தவனே

கேசியின் மனைவிசொல் கேட்டிறங்கி
நதிகள்ஓடிவர
ஆசியுடன் இலக்குமி ஆங்கே
தரைமேடாக்க

கங்கையும் தாமிரபரணியும் கைகட்டி
சுற்றிநிற்க
சங்குடன் படுத்த சக்ராயுத மன்னனே

மாலையாய் இருநதியும் மணாளனைத்
தழுவிட
சோலைவன அழகனே சோர்வுகளை
நீக்குபவனே

பன்னிரண்டு கரங்களிலும் பன்னிரண்டு
ருத்திராட்சம்
எண்ணிவைத்து கேசியை எழவிடாது
செய்தவனே

வட்டாறை சுற்றியே வளைத்த
சிவாலயங்களே

பக்தியுடன் சிவராத்திரியில் பாதசிவனை
வணங்குவோமே

தெற்கே தலைவைத்து வடக்கே திருவடியே
இடக்கை தொங்கிவிட வலக்கையில்
முத்திரையே

ஆதிகேசவனே அனந்தனே ஆயர்பாலனே
ஆனந்தரூபனே
சோதிவடிவமே பிறப்பறுக்கும் சுந்தரனே
எம்பெருமானே

http://temple.dinamalar.com/New.php?id=87

## திருவாழ்மார்பன் - திருப்பதிசாரம் - கன்னியாகுமரி

108 திவ்ய தேசங்கள் - 76

சங்கு சக்கரத்துடன் சப்தரிஷிகளுடன் இருப்பவரே
பொங்கும் அழகுடன் புவனம் காப்பவரே

ஒன்பது அடியில் ஒய்யாரமாய் அமர்ந்தவரே
எண்ணங்கள் யாவையும் எழிலாய் நடத்துபவரே

குழந்தை வேண்டி குறுநாட்டரசன் கேட்டிட
அழகான குழந்தையாய் அவதரித்த நம்பியே

நம்மாழ்வார் அவதரித்து நாராயணனை தியானிக்க
எம்பெருமான் அருளிட எழுந்தருளிய தலமே

சிவவடிவில் வந்தவரை சிந்தித்து நின்றனரே
தவமுடிவில் திருமால் தனிவடிவில் கண்டனரே

கல்லும் சுண்ணாம்பும் கடுகும் சர்க்கரையோகமே
அல்லும் பகலும் அனுதினம் நம்மைக்காக்குமே

திருவாழ் மார்பன் திருவண்பரிசார திருவருள்தலமே
திருநகரி தலத்து திருஞான முத்திரையே

http://temple.dinamalar.com/New.php?id=81

**அழகிய நம்பிராயர் - திருக்குறுங்குடி**
108 திவ்ய தேசங்கள் - 77

அழகிய நம்பிராயர் அருளிடும் திருத்தலமே
பழகிய ஆழ்வார்கள் பாடிய திருத்தலமே

மோட்சம் வேண்டுமென முன்னின்று கேட்டிட
காட்சிக்கு இத்தலத்தில் கால்வைக்க சொன்னாரே

ஆழ்ந்த கருத்தினை அழகாய் சொல்லிடவே
தாழ்குல நம்பாடுவானுக்கு தரிசனம் தந்தாரே

கொடிமரம் விலகவே கிடைக்கும் தரிசனமே
அடிமுதல் சிரம்வரை ஆளுயர வராகமே

பெரிய வராகம் சிறிதாய் சுருங்கிட
அரிய இத்தலம் ஆனதே குறுங்குடி

குரங்கம் காத்திடவே கோவிலில் எழுந்தானே
அரங்கத்து பெருமாளே அழகிய நம்பியாரே

இசையினால் தினமும் இறைவனைக் காணலாமே
அசையும் பொருள்யாவும் அடையும் மோட்சமே

ஏகாதசி மகிமையில் எழிலாய்
ஒருகதையே
ஆகாய சிலம்பாறு அளந்த திருவடியே

அதிசய உருவமே ஆனந்த வடிவமே
மதிக்கு புரியுமோ மதிக்கவும் தெரியுமோ

உன்னைப் பாடவே ஒருநாள் போதுமோ
இன்னமும் பாடிட இருபத்திநாலு
மணிபோதுமோ

உண்பதும் உரைப்பதும் உறங்குவதுமாய்
ஒருவாழ்வே
எண்ணத்தில் கலையாது என்றும்
இருப்பாயே

http://temple.dinamalar.com/New.php?id=194

## தோத்தாத்ரி நாதன் - நாங்குனேரி திருநெல்வேலி
108 திவ்ய தேசங்கள் -78

ஒன்பது சுயம்பு ஒன்றான தலமே
கண்குளிர கண்டுவிட களிப்பபூற்றும் தலமே

மச்சமுதல் கல்கிவரை மாறிடும் அவதாரமே
உச்சிமுதல் உள்ளங்கால்வரை உயரிய அவதாரமே

தேவியர் இருவருடன் தோத்தாத்ரி அவதாரமே
கோவிலில் தாயாருடன் கொலுவிருக்கும் தெய்வமே

நான்கு ஏரிகளால் நாங்குனேரி ஆகுமே
ஆன்மீக அறிவை அண்டமெங்கும் பரப்புமே

மரித்துவிட்ட அசுரரால் மாசுபெற்ற நிலத்தை
அரிதான உருவில் அழகாக்கிய தலமே

என்னப்பன் கண்ணனே என்னை ஆள்பவனே
மண்டபத்தில் எழுந்த மதுசூத வண்ணனே

மாசில்லா அழகனே மதிமயக்கும் பாலனே
ஆசிகள் தருவாயே ஆனந்தம் அளிப்பாயே

http://temple.dinamalar.com/New.php?id=172

## ஸ்ரீ வைகுண்டம் வைகுண்ட நாதர் - நவதிருப்பதி -1

108 திவ்ய தேசங்கள்- 79

நின்றும் இருந்தும் கிடந்தும் நிமிர்ந்த
பெருமாளே
அன்றும் இன்றும் என்றும் அணைத்த
பெருமாளே

கள்ளனாய் வந்து கவர்ந்த பெருமாளே
உள்ளத்தை அள்ளும் உயரிய பெருமாளே

காலதூஷகன் பிடிபடாமல் காத்த
பெருமாளே
கோலத்தைக் காட்டி கோவில்கொண்ட
பெருமாளே

மன்னன் மனம்திருந்த மண்டபம்வந்த
பெருமாளே
கண்ணைக் கவரும் கள்ளபிரான்
பெருமாளே

வைகுண்ட தரிசனம் வையத்தில்
பெருமாளே
வைகுண்டத்தில் கைலாயமும் வந்திடும்
பெருமாளே

மணித்துளி தரிசனம் மனமறியும்
பெருமாளே
தனித்து நின்றால் தன்னுள்தெரியும்
பெருமாளே

குடையாய் ஆதிசேடன் கூடவே
பெருமாளே
விடையாய் தெரியும் வேங்கட பெருமாளே

நம்பினோரைக் கைவிடாத நவதிருப்பதி
பெருமாளே
கும்பிட்டோர் குலத்தைக் காத்திடும்
பெருமாளே

http://temple.dinamalar.com/New.php?id=910

## விஜயாசனர- நவதிருப்பதி 2 - நத்தம் தூத்துக்குடி
108 திவ்ய தேசங்கள்-80

நத்தம் என்ற நல்லூரில் குடிகொண்டவனே
நித்தம் என் குறைகளை நீக்கி நிற்பவனே

வரகுணமங்கை வேதவித்துக்கு வகையாய் அருளியவனே
வரங்களை தந்து வையகம் காப்பவனே

வெற்றிகளை தந்திடும் விஜயாசன பெருமாளே
குற்றங்கள் பொறுத்திடும் குறையில்லா குணவானே

சந்திர கிரகமாய் சங்கடம் தீர்ப்பவனே
மந்திர வேத மறைபொருள் நாயகனே

நம்பினோரைக் கைவிடாத நவதிருப்பதி பெருமாளே
கும்பிட்டோர் குலத்தைக் காக்கும் பெருமாளே

## வைத்தமாநிதி பெருமாள்- நவ திருப்பதி 3 திருக்கோளூர்

108 திவ்ய தேசங்கள் 81

குபேரன் சாபத்தால் குமித்த
நிதிதொலைந்ததே
குபேரன் நவநிதியை குறைவின்றி
காத்தவனே

வைத்தமா நிதியால் வையகம் காத்தவனே
சாத்திரங்கள் ஓதிடும் சத்திய நாதனே

திருக்கோளூர் கோவிலில் திருவருள்
வேந்தனே
திருசெவ்வாய் கிரகமாய் தினமும்
காப்பவனே

பார்வதி சாபம் போக்கவந்த நாராயணனே
பாரமுழுதும் காக்கும் பாற்கடல்
நாராயணனே

நம்பினோரைக் கைவிடாத நவதிருப்பதி
தலமே
கும்பிட்டோர் குலத்தைக் காக்கும் தலமே

**பூமி பாலகர் - நவ திருப்பதி** 4
**திருப்புளியங்குடி**
108 திவ்ய தேசங்கள் 82

திருப்புளியங்குடியில் பள்ளிகொண்ட
திருமால் அழகனே
திருநாபிக் கொடியும் திருக்கமலம்
சேரும்அழகே

நாபிக்கொடி இணையும் நாயக
அழகனே
சோபிக்கும் உன்நாபியின் சுந்தர அழகே

பூமியை பாதுகாக்கும் பூமிபாலக
அழகனே
பூமியை வலம்வரும் பூலோக அழகே

சாபங்கள் தீர்த்து சாத்திரம் படைக்கும்
அழகனே
பாவங்கள் போக்கிடும் பாற்கடல் அழகே

வருணன் வணங்கிய வைகுண்ட அழகனே
கருணை மழைபொழியும் கடிமலர் அழகே

நம்பினோரைக் கைவிடாத நவதிருப்பதி
தலமே
கும்பிட்டோர் குலத்தைக் காக்கும் தலமே

http://temple.dinamalar.com/New.php?id=575

**ஆதிநாதன் - நவ திருப்பதி -5**
**ஆழ்வார் திருநகரி**
108 திவ்ய தேசங்கள் -83

சொல்லால் பாடிய செம்புலவர் ஆழ்வார்
கல்லைப் போட்டு கண்விழித்த தலமே

இடர்கள் போக்கிட இன்னல்நீக்கும்
இத்தலமே
சடகோபர் நம்மாழ்வாராகிய சத்திய
புளியமரமே

மதுரகவி ஆழ்வார் மங்காளாசனம் செய்திட
பதுமராக நாதன் பாதங்கள் பதித்த தலமே

தாந்தனுக்கருளி தாழ்குலம் உயர்குலம்
ஆக்கியவரே
பாந்தமாய் மகிழமாலை பத்தினிக்
களித்தவரே

மணக்கோல பெருமாளை மணமார
வேண்டவே
குணக்குன்று கோவிந்தனை கும்பிட்டு
நிற்போமே

எத்தை தின்றால் இப்பித்தம் தெளியுமோ
அத்தை தின்று அங்கே கிடக்கும்
ஆன்மாவே

உறங்காப்புளி காத்திட உன்னை
வேண்டுமே
குரங்குப்பிடி பிடித்து கும்பிட்டு நிற்குமே

நம்பினோரைக் கைவிடாத நவதிருப்பதி
தலமே
கும்பிட்டோர் குலத்தைக் காக்கும் தலமே

http://temple.dinamalar.com/New.php?id=683

## மகரநெடுங்குழைக்காதர் - நவ திருப்பதி 6
## தென்திருப்பேரை

108 திவ்ய தேசங்கள் - 84

மகரநெடுங் குழைக்காதர் மங்காத மூலவராக
நிகரில் முகில்வண்ணன் நிலையான உற்சவராக
தென்திருப்பேரை ஊரில் திருப்பதியாய் நிற்க
அன்போடு எங்களை அரவணைக்கும் அண்ணலே

துர்வாசர் மந்திரம் துதித்த பூதேவி
கர்வங்கள் அழிந்திட கரங்களில் குண்டலங்கள்
மூழ்கிய தாமிரபரணியில் முத்தாய் பெற்றிட
வாழ்ந்திடும் திருப்பேரை வளமாய் பெற்றாள்

குண்டலங்களை அவள் குணவானுக் களித்திட
மண்டலம் காக்கும் மங்கள நாயகனே
வருணன் பூஜிக்க வளர்பிறை நிலவாகி
தருணத்தில் மழையாய் தரையிறங்கும் பெருமாளே

சொல்லின் நாயகனாய் சுவைக்கும்
பெருமாளே
அல்லும் பகலும் அனைவரையும்
காப்பவரே
நம்பினோரைக் கைவிடாத நவதிருப்பதி
தலமே
கும்பிட்டோர் குலத்தைக் காக்கும் தலமே

http://temple.dinamalar.com/New.php?id=574

## வேங்கட வாணன் - நவதிருப்பதி 7 - பெருங்குளம்

108 திவ்ய தேசங்கள்-85

வேங்கட வாணனை வேண்டி தினம் பாடுவோமே
ஓங்கியே உலகளந்த உத்தமன் புகழ் பாடுவோமே

பெருங்குளத்து நாயகன் பேர்சொல்லிப் பாடுவோமே
கருமை மேனியனை கருத்தில் கொண்டு பாடுவோமே

வேதாசரன் மகளாகி வேங்கடனை மணப்போமே
கோதாவின் நாயகனை கும்பிட்டு நினைப்போமே

கமலாவதி தவத்திற்கு கருணையுடன் வருவானே
கமலத்து மணாளனுடன் கண்மூடி ஆடுவோமே

பாலிகை வனத்திலே பாற்கடல் வேந்தனே
காளிங்க அஸ்மாசரன்மேல் களிப்புடன் நடனமே

மாயக்கூத்தன் நடனத்தில் மயங்கியே ஆடுவோமே

ஆயர்பாலனை இராசத்தில் ஆலிங்கனம் செய்வோமே

அண்டமே இராசமாட ஆனந்த நிலையே கண்டு களிக்கும் கண்ணிலே பிருந்தாவனமே

http://temple.dinamalar.com/New.php?id=573

## ஸ்ரீனிவாசன் - நவ திருப்பதி 8 தொலைவில்லி மங்கலம்

108 திவ்ய தேசங்கள் 86

தொலைவிலே இருந்தாலும் தொல்லைகள் தீர்ப்பவரே
மலையிலே நின்றருளும் மங்கல ஸ்ரீனிவாசரே
அலையும் மனத்தை அடக்கி ஆள்பவரே
விலையில்லாக் குந்துமணி விரிமார்பு மணாளனே
கலையும் மேகமாய் கண்ணாமூச்சி ஆடுபவரே
சிலையிலே தெரிந்து சிந்தை குளிர்பவரே

அலமேலு மங்கையுடன் அருள்தரும் சீலரே
உலகத்தைக் காக்க ஓங்கி வளர்ந்தவரே
சலசலக்கும் மனதில் சங்கடம் தீர்ப்பவரே
குலத்தைக் காக்கும் கோவிந்த ரூபனே
தலப்பெருமை இரண்டாக தாமரை வடிவனே
பலவித அவதார பாற்கடல் நாதனே

மங்களம் தந்திடும் மங்கல ஸ்வரூபனே
பொங்கிடும் அழகில் புவனம் சிவக்குமே
சங்கும் சக்கரமும் சத்தியம் பேசிடுமே
மங்காத ஜொலிப்பில் மகிழ்வை தந்திடுமே
அங்கும் இங்குமான அழகான நவதிருப்பதியே
எங்கும் பரவிய எழில்வடிவ மூர்த்தியே

http://temple.dinamalar.com/New.php?id=921

## தெய்வ நாயகர் - திருத்தேவனார் கோவில்

108 திவ்ய தேசங்கள் 87

துர்வாசர் மாலையை துச்சமாக நினைத்து
கர்வத்துடன் யானையின் கழுத்தில்
இட்டுவிட
தன்வினை சுட்டுவிட தரித்திரம் பெற்றானே
இந்திரன் கர்வம் இழந்து நின்றானே

பிரம்மனும் கைவிட பெருமாளை சரண்புக
இரங்கிய தெய்வமே இத்தலத்தில் இறங்கிய
தெய்வமே
பக்தர் வாக்கு பலித்துவிட வந்தவரே
முக்தி அளிக்க முதலாய் நின்றவரே

பாற்கடல் கடைந்திட பாருக்குள் வந்தவரே
மார்பில் அழகிய மகாலக்ஷ்மி தாங்கியவரே
அற்புதம் பலபுரிந்து அருளைப் பொழிபவரே
பொற்பாதம் பணிந்து பூமாலை
சாத்துவோமே
இங்கும் அங்கும் எங்குமாய் இருப்பவரே
இன்னபெயர் என்னபெயர் எங்கு தேடுவேனே
சொன்னபெயர் யாதோ சொல்லாதவர்
யாரோ
மண்ணிலும் விண்ணிலும் மாறாத நாயகரே

http://temple.dinamalar.com/New.php?id=248

## அரவிந்தலோசனர் - நவ திருப்பதி 9 தொலைவில்லி மங்கலம்

108 திவ்ய தேசங்கள் 88

இருந்து இருந்த அரவிந்த லோசனரே
கருத்து கருத்த கண்ணான கண்ணனே

சிவந்து சிவந்த செந்தாமரைக் கண்ணனே
உவந்து உவந்த உற்சவ மூர்த்தியே

மருந்து மருந்தான மாமறை வேதமே
அருந்தும் அருமறை ஆயூளைக் காக்குமே

கவர்ந்து கவர்ந்த கருந்தடங் கண்ணியே
தவழ்ந்து தவழ்ந்த தளிர்மேனி
தாமோதரனே

மங்கலத்தில் மலியாத மாமகளின்
மங்களமே
செங்கமல செழிப்பில் சேரும்
நவதிருப்பதியே

இரட்டையில் இரட்டிப்பான இனிய
திருப்பதியே
பரந்து விரிந்த பாரினில் நவதிருப்பதியே

http://temple.dinamalar.com/New.php?id=920

**நின்ற நாராயணப் பெருமாள் -**
**திருத்தங்கல் விருது நகர்**
108 திவ்ய தேசங்கள் 89

திருத்தங்கலில் தங்கிய திருமகளின்
திருமாலே
திருக்கோவிலில் நின்றபடி
திருவருளும் திருமாலே

திருத்தேவியர் நால்வரை திருமணந்த
திருமாலே
திருத்தங்கல் அப்பனாய் திகழும் திருமாலே

திருமகள் ஸ்ரீதேவி திருவழகு
திருமாலே
திருச்செல்வி பூதேவி திவ்யமான
திருமாலே

திருதேவதை நீளாதேவி திருச்செல்வ
திருமாலே
திருநங்கை ஜாம்பவதி திருமணத்
திருமாலே

திருக்கரங்கள் நான்குடன் திருகருடன்
திருமாலே
திருவாசுகி ஏந்திய திருக்கோலம்
திருமாலே

திருக்கதிரவன் தோஷத்தை தீர்த்த
திருமாலே
திருஆலை மலைமேலே திருப்பள்ளி
திருமாலே

திருமணத் தடைநீக்கும் திருவருள்
திருமாலே
திருப்பேரனுக்கு திருக்கரத்தால் திருமணம்
திருமாலே

திருமாலை சாற்றினேன் திருவருளால்
திருமாலே
திருதினம் ஒருபாடலே திருமஞ்சனம்
திருமாலே

http://temple.dinamalar.com/New.php?id=687

## வடபத்ரசாயி - திருவில்லிபுத்தூர்
108 திவ்ய தேசங்கள் 90

ஆண்டாளை ஆண்ட ஆண்டவனே
ஆண்டாண்டு காலமாய் அழியாதவனே

சூடிக் கொடுத்ததை சூடியவனே
சூடிய சூடாமணியால் இணைந்தவனே

வில்லிப்புத்தூரில் வில்லாளனாய்
வந்தவனே
வில்லுடன் கோலுடன் வீற்றஇராஜனே

கோவிந்தனாய் கோதையை மணந்தவனே
கோவினை மேய்த்த கோலாகலனே

கள்ளழகர் அருளியதால் கல்யாணமே
கள்ளழகர் புடவை நிலமையை கணிக்குமே

சொன்னதை சொல்லிடும் சிறுகிளியே
சொன்னசொல் காத்த செங்கோலனே

அரசுக்கு சின்னமான அரசனே
அரசனாய் எங்களை ஆண்டவனே

http://temple.dinamalar.com/New.php?id=912

**கூடலழகர் - மதுரை**
108 திவ்ய தேசங்கள் 91

பல்லாண்டு பாடலை பாடவைத்த
கூடலழகே
கல்லிலே கலையாய் காட்சிதரும்
கூடலழகே

கூடுதல் அழகுடன் குடிகொண்ட
கூடலழகே
ஊடுருவி உள்ளத்தை உருக்கிடும்
கூடலழகே

மீனாய் வடிவெடுத்து
மின்னிடும்கூடலழகே
வானாய் விரிந்த விஸ்வரூப கூடலழகே

அஷ்டாங்க விமான அதிசய கூடலழகே
கஷ்டங்கள் போக்கிடும் கருணைமிகு
கூடலழகே

பஞ்சபூத தத்துவமான பாஞ்சஜைன்ய
கூடலழகே
தஞ்சமென வந்தவரை தாங்கிடும்
கூடலழகே

எட்டெழுத்து மந்திரமாய் எழிலான
கூடலழகே
கட்டழகு சீமானாய் கள்ளமிகு கூடலழகே

நான்மாடக் கூடலாய் நறுமண கூடலழகே

வான்மழை காத்த வகைமேக கூடலழகே

முக்கோல முகுந்தனாய் முன்னின்ற
கூடலழகே
இக்கோலம் காணவே இனியதவம்
கூடலழகே

நின்றும் இருந்தும் கிடந்த கூடலழகே
அன்றும் இன்றும் என்றுமான கூடலழகே

http://temple.dinamalar.com/New.php?id=697

## கள்ளழகர்- திருமாலிருஞ்சோலை - மதுரை

108 திவ்ய தேசங்கள் 92

கண்ணை மயக்கி கருத்தையள்ளும் கள்ளழகு
விண்ணை அளந்த விஸ்வரூப பாதங்களழகு
மண்டூக சாபத்தை மாற்றும் அழகரழகு
தண்ணென குளிரும் தாமரை வல்லியழகு

கையை வைத்ததில் வைகை வந்ததழகு
மாயை விலக்கிடும் மாமயன் தானழகு
சேயைக் காத்திடும் செல்லத் தாயழகு
வாயைத் திறந்து வானையளந்த சேயழகு

குண்டோதரன் பசியை குறைத்த கங்கையழகு
கண்ணிமையில் தெரியும் கல்யாணக்
கோலமழகு
தர்மதேவன் வேண்டிய தலத்தில்
தங்கியதழகு(எம)
தர்மனும் பூஜிக்கும் தலமானது
தரணியிலழகு

அம்மை அப்பனாய் அகிலம் காப்பதழகு
எம்மை காக்கவே எழுந்தருளிய எழிலழகு
ஏறிய வாகனங்கள் ஏழில் வருவதழகு
கோரிய வேண்டுதலை கொடுக்கும்
கருணையழகு

http://temple.dinamalar.com/New.php?id=695

**காளமேகப் பெருமாள் - திரு மோகூர்**
108 திவ்ய தேசங்கள் 93

பெண்ணாகி இன்னமுதை பெறும்பேற்றை
தருபவனே
வண்ணங்கள் பலவாகி வடிவங்கள்
கொண்டவனே

கள்ளத் தூக்கத்தில் கண்மூடி கிடப்பவனே
உள்ளத்தை கொள்ளை உறங்கியே
கொள்பவனே

வீடுபேறு தந்திட வீடுகள் வருபவனே
காடுமலை யாவிலும் காட்சியாய்
ஆனவனே

நண்பனாய் இருந்திட நடுநிசியில்
பிறந்தவனே
மண்ணினைத் தின்று மாயங்கள்
செய்தவனே

காளமேகமாய் தன்னுள் கருணை
கொண்டவனே
ஆளவந்த நாயகனாய் ஆண்டாளை
ஆண்டவனே

நித்திரை போக்கிடும் நிறைந்த
விழிப்பானவனே
முத்திரையாய் சக்கரம் முன்னின்று
கொண்டவனே

சக்கரத்து ஆழ்வாராய் சதுரங்கம்
ஆடுபவனே
அக்கரை செல்லவே ஆடிவரும்தோணி
ஆனவனே

இருநூறு பாடல்கள் இனிதாய் பாடியவனே
இருக்கும் இடமெல்லாம் இனிமை
தருபவனே

http://temple.dinamalar.com/New.php?id=8

## சவுமிய நாராயணன் திருக்கோவில் - சிவகங்கை

108 திவ்ய தேசங்கள் 94

இருதேவியர் உடன் இருக்கும் நாராயணா
இருக்கும் இடத்தில் எல்லாமிருக்கும் நாராயணா

தொட்டிலில் குழந்தையாய் தவழ்ந்திடும் நாராயணா
கொட்டிய அழகில் கொஞ்சும் நாராயணா

புத்திர பேற்றினை புவனத்தில்தரும் நாராயணா
அத்தியில் பூக்கும் அழகான நாராயணா

விளக்காய் வாழ்வில் வெளிச்சம்தரும் நாராயணா
குளத்தில் வந்த குலவிளக்கு நாராயணா

கிணற்றில் கங்கையாய் கிளம்பிய நாராயணா
மணத்தில் மனதை மகிழ்விக்கும் நாராயணா

நம்பியிடம் ராமானுஜர் நாடிவந்த நாராயணா
நம்பிக்கை கொடுத்த நாமம் நாராயணா

நரகமே கிடைத்தாலும் நாஉரைத்த நாராயணா

கரமதை கூப்பி காவியம்படை நாராயணா

கதம்ப மகரிஷிக்கு கதம்பகோலம்
நாராயணா
விதவித கோலத்தில் விளையாடு
நாராயணா

http://temple.dinamalar.com/New.php?id=421

## ஆதி ஜெகந்நாதர் - திருப்புல்லாணி
108 திவ்ய தேசங்கள் 95

ஆதியும் ஜோதியும் ஆன பொருளே
போதிமர வடிவான புண்ணிய பொருளே
சேதுக்கரை ஓரத்தில் சயன பொருளே
ஓதும் மறைகளின் ஒய்யார பொருளே

நினைத்தது நடக்க நிறைந்த பொருளே
அணைத்த அணையான அருமை பொருளே
தர்ப்பையில் சயனித்த தாமரை பொருளே
அரத்தங்கள் புரியும் ஆண்டவ பொருளே

சீதையை மீட்கவந்த சிறந்த பொருளே
கீதையை உரைத்த கிருஷ்ண பொருளே
புத்திரனை தந்திடும் புத்திர பொருளே
ரத்தனமாய் ஜொலிக்கும் ஸ்ரீராம பொருளே

நாகரின் வடிவில்வரும் நாயகப் பொருளே
போகமும் பொன்னும் பொருளும்தரும் பொருளே
அரசமர வடிவான ஆனந்த பொருளே
கரங்கள் தொழுதிடும் காட்சி பொருளே

இரவா பகலா அறியேன் பொருளே
உறவா பிரிவா உணர்வேன் பொருளே
என்னமணி என்னபொழுது ஏதுமறியேன் பொருளே
உன்னை மட்டும் உள்ளமறிவேன் பொருளே

http://temple.dinamalar.com/New.php?id=837

**சத்திய மூர்த்தி- திருமயம் புதுக்கோட்டை**
108 திவ்ய தேசங்கள் 96

சத்திய வாக்கினை சாத்தியம் ஆக்கின
சத்தியனே
நித்தம் காத்து நிறைவை தரும்
நித்தியனே

சங்குடன் காத்து சக்கரம் ஏந்திய
சங்குசக்கரனே
மங்கல வாழ்வு தரும் மங்கள நாயக
மங்கலனே

ஆதிசேடன் அஞ்சிட அனல் கக்கி தள்ளிய
ஆதிநாநகனே
ஜோதி வடிவில் சுந்தரம் படைத்த
ஜோதிஸ்வரூபனே

மெய்யான உடலுடன் உயிரையும் காத்த
உயிரமெய்யே
மய்யத்தில் அமைந்த மாதவ நாயக
மய்யனே

ஐயங்கள் அகற்றி அகத்தை தூய்மை
ஆக்கியவனே
கைவல்யம் அளித்து காத்து கரங்கள்
அருள்பவனே

http://temple.dinamalar.com/New.php?id=411

**ரகுநாயகன் - அயோத்தி**
108 திவ்ய தேசங்கள் 97

தந்தை சொல் தவறாத ரகுநாயகா
சுந்தர வடிவ சுபிட்ச ரகுநாயகா

ஒருமனைவி ஒருவாக்கு ரகுநாயகா
கருத்தினைக் கவரும் ரகுநாயகா

தசரத புத்திர தரும ரகுநாயகா
அசராத வீர அழகு ரகுநாயகா

வாக்கினை காத்த விஜய ரகுநாயகா
ஏக்கத்தை தீர்த்து சீதைமீட்ட ரகுநாயகா

சுக்ரீவனுக் கருளிய சூரியவம்ச ரகுநாயகா
பக்தருக் கருளும் பாற்கடல்நாதா
ரகுநாயகா

அமைதியின் வடிவம் அன்னையின்
ரகுநாயகா
சுமைகள் சோகங்கள் போக்கிய ரகுநாயகா

அன்பின் வடிவம் அழகு ரகுநாயகா
துன்பத்தை இன்பமாக்கும் தூய ரகுநாயகா

ராமஜெயம் ராமஜெயம் ரகுநாயகா
ராமஜெயம் ராமஜெயம் ரகுநாயகா

http://temple.dinamalar.com/New.php?id=842

**கோவர்த்தநேசன் - மதுரா**
108 திவ்ய தேசங்கள் 98

மதுவனத்து மன்னனே மதுராவின் கண்ணனே
மதுரமான பாலனே மதுசூதன அழகனே

மாமனை வதம்செய்ய மாற்றாந்தாய் மகனே
தாமரை கண்ணனே தாயின் மைந்தனே

தேவகியின் மகனே தேவர்கள் நண்பனே
காவல் புரிபவனே கருநீல வண்ணனே

ஆயர் பாலனே ஆய்ச்சியர் நேசனே
மாயங்கள் செய்பவனே மனதை மயக்குபவனே

விளையாடி களிப்பவனே வேடிக்கை இனியோனே
கலைகள் தருபவனே கருத்தினை கொள்பவனே

மண்ணை உண்டவனே மண்டலம் காத்தவனே
வெண்ணை உண்பவனே வெற்றியை தருபவனே

http://temple.dinamalar.com/New.php?id=1784

**கிருஷ்ணன் - துவாரகா**
108 திவ்ய தேசங்கள் 99

கம்சனை வதம் செய்த கண்ணனே
வம்சத்தை வளரச் செய்த கண்ணனே

அரசனாய் ஆண்டு வந்த கண்ணனே
தரமான சாரதியாய் தேரோட்டிய
கண்ணனே

ஆசானாய் உபதேசித்த அருள்மிகு
கண்ணனே
வாசமிகு பாரிஜாத வசந்த கண்ணனே

உக்ரசேனனை அரசனாக்கி உயர்த்திய
கண்ணனே
ருக்மிணியை மணந்த ரத்தின
கண்ணனே

பக்தருக் கருளும் பார்த்தசாரதி
கண்ணனே
சக்தியை அளிக்கும் சாகச கண்ணனே

கடலை குடைந்த கடிநிலத்து
கண்ணனே
படரும் கொடியென பாசமூட்டும்
கண்ணனே

கோபியர் நெஞ்சில் குடிகொண்ட
கண்ணனே
சோபிக்கும் அழகுடன் ஜொலிக்கும்
கண்ணனே

உலகெங்கும் பரவிய உயர்திரு
கண்ணனே
குலத்தைக் காக்கும் கோபால
கண்ணனே

## பிரகலாதவரதன் - அஹோபிலம்
108 திவ்ய தேசங்கள் 100

தூணிலும் இருந்து துரும்பிலிருக்கும்
தூயவனே
பேணிக் காக்கும் பெரியநரசிம்ம மாயவனே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட
வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே

பாரினை தினம்காக்கும் பார்கவ நரசிம்மரே
ஊரினைப் பேணிடும் யோகானந்த
நரசிம்மரே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட
வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே

சக்கரம் சங்குடன் சக்ரவட நரசிம்மரே
பக்தருக் கருளும் அஹோபில நரசிம்மரே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட
வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே
வாழ வைக்கும் வராக நரசிம்மரே
மகிழ வைக்கும் மாலோலா நரசிம்மரே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட

வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே

ஜொலிக்கும் பிழம்பான ஜ்வால நரசிம்மரே
ஒலிக்கும் வேதமான ஒய்யாரபாவன
நரசிம்மரே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட
வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே

காட்சி தரும் காரஞ்ச நரசிம்மரே
மாட்சிமை பெற்ற மகாநவ நரசிம்மரே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட
வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே

இராமனுக்கு சீதையை இரம்மியமாய்
தந்தவரே
வாமனனுக்கு முன்னதாய் வையத்தில்
வந்தவரே
நாராயணா என்றே நாவினிக்க
பிரகலாதன்பாடிட
வாராய் என்றவுடன் வாகாய் தூணில்
வந்தவரே

http://temple.dinamalar.com/New.php?id=89

## வெங்கடாஜலபதி - மேல் திருப்பதி
108 திவ்ய தேசங்கள் 101

குறை ஒன்றும் இல்லை கோவிந்தா
கோவிந்தா
நிறையாய் நாளும் நிறைவாய் கோவிந்தா
கோவிந்தா

பறை சாற்றி பாடுவேன் கோவிந்தா
கோவிந்தா
மறையோதும் மலைவாசா கோவிந்தா
கோவிந்தா

கடன்பட்ட மாலா கோவிந்தா கோவிந்தா
உடன்வருவாய் உலகம் யாவும் கோவிந்தா
கோவிந்தா

பத்மாவதி மணந்த பாற்கடல் வாசா
கோவிந்தா கோவிந்தா
சத்தியசீலன் சாந்தமூர்த்தி கோவிந்தா
கோவிந்தா

மார்பிலே உதைத்தாலும் மாறாதபுன்சிரிப்பு
கோவிந்தா
மார்பிலே திருமகளை மலராய்கொண்ட
கோவிந்தா

கோடிகோடி பணம் குபேரனுக்களிக்கும்
கோவிந்தா
மாடியும் கீழுமாய் மண்மணக்கும்
கோவிந்தா

மலையேறி வருவோம் மார்க்கம் காட்டு
கோவிந்தா
விலையில்லா விரிமார்பு வேந்தனே
கோவிந்தா

தினமுன் புகழ் திகட்டாது பாடுவேன்
கோவிந்தா
மனதிலே அகலாது மாறாதிருப்பாய்
கோவிந்தா

குறை ஒன்றும் இல்லை கோவிந்தா
கோவிந்தா
நிறையாய் நாளும் நிறைவாய் கோவிந்தா
கோவிந்தா

http://temple.dinamalar.com/New.php?id=1054

**முக்திநாத் - நேபால்**
108 திவ்ய தேசங்கள் 102

முக்தியை தரும் மோகன கண்ணனடி
தோழி
பக்தியில் திளைத்தால் பரவசம் தானடி
தோழி
சக்தியை தந்திடும் சாளிக்கிராமமடி
தோழி
அக்கரை செல்ல ஆடிவரும் தோணியடி
தோழி

தவமிருந்த விஷ்ணுவும் தன்னில்
சேர்க்குமடி தோழி
அவனியில் மோட்சம் அருளிடும்
தலமடி தோழி
உவகை பொங்கும் உற்சாகம்
பிறக்குமடி தோழி
பவனிவரும் பாற்கடல் பரந்தாம
திருவடி தோழி

திவ்யமாய் தேசங்கள் திகழும் பூமியடி
தோழி
பவ்யமாய் நாமும் பாடிவரும் அழகடி
தோழி
எவ்விடம் நோக்கினும் எழிலாய்
தெரியுமடி தோழி

இவ்விடம் அவனே இருக்குமிடம்
இதயமடி தோழி

கண்ணனின் கோபியராய் கருத்தினில்
கலப்போமடி தோழி
மண்ணிலே மணம்தரும் மகிழம்பூ
சரமடி தோழி
விண்ணகர கோபுரம் விரித்தாடும்
அரங்கமடி தோழி
பண்ணிலே பாட்டாய் பாதை காட்டுமடி
தோழி

உன்னையும் என்னையும் ஊரையும்
சேர்க்குமடி தோழி
தன்னிலே அடக்கமாக்கி தளிராய் காக்குமடி
தோழி
மன்னவன் வந்திட மங்கையர்
மகிழ்வோமடி தோழி
சின்னமாய் நெஞ்சிலே சேவித்து
சேர்வோமடி தோழி

http://www.muktinath.org/muktinath/

## நைமிசாரண்யம் - உத்திர பிரதேசம்
108 திவ்ய தேசங்கள் 103

சக்கர வடிவிலே சத்திய தலமே
பக்தரை காக்கும் பரிசுத்த சக்கரமே

தர்பை சக்கரமாகி தரையிலே விழுமே
கர்வத்தை அடக்கிடும் கையடக்க தர்பையே

ஆரண்ய நடுவிலே அழகான ஆலயமே
காரண மூர்த்தியின் கருணை ஆரண்யமே

உத்தம நாயகனின் உகந்த ஆலயமே
உத்திர பிரதேசத்து உயரிய உத்தமனே

முனிவர்களை காத்திட முன்வந்த
இறையே
இனிவரும் காலத்தை இனிதுகாக்கும்
முனிவரே

பாரத புராணம் பாரம்பரிய காவியமே
சாரமாய் வியாசருக்கு சரளமான பாரதமே

முழுநிலவு வேளையில் மூழ்கிடும்
தீர்த்தமே
முழுதான பூரணத்தின் முக்திதரும்
முழுநிலவே

https://ta.m.wikipedia.org/wiki/நைமிசாரண்யம்

## நவமோகன கிருஷ்ணா - ஆயர்பாடி கோகுலம்

108 திவ்ய தேசங்கள்-104

கோகுலத்தில் பாலகனாம் கோபாலன்
தாலேலோ
கோகுலத்து மோகன கோலாகலனே
தாலேலோ

சத்யபாமா நாயகன் சாரதியே தாலேலோ
நித்ய மங்களரூப நிர்மலனே தாலேலோ

கண்ணனாய் அக்ரூரர் கணநேரம்
தாலேலோ
கண்களை அதனால் கொய்தாயோ
தாலேலோ

பத்தினியை சாந்தபடுத்திய
பக்தன்புகழ்  தாலேலோ
மத்தினால் கடைந்த மன்மதனே தாலேலோ

ஸூரதாஸர் கண்மலர சுந்தரனே
தாலேலோ
பூரண பொலிவான புதல்வனே தாலேலோ

ஆயர்பாடி மாளிகையின் ஆனந்தனே
தாலேலோ
மாயங்கள் செய்த மன்னவனே தாலேலோ

ஆவினை மேய்த்த ஆ நந்தகுமாரனே
தாலேலோ

கோவிந்த மூர்த்தி கோவர்தன கிரியே
தாலேலோ

எப்போதும் என்னுடன் இருப்பவனே
தாலேலோ
தப்பாது காத்திடும் தாமோதரனே
தாலேலோ

https://www.trsiyengar.com/id265.shtml

**ரகுநாத் கோவில் -ஜம்மு காஷ்மீர்**
108 திவ்ய தேசங்கள் 105

ஜம்முவில் அமர்ந்து ஜகத்தை
காப்பவனே
இம்மைக்கும் மறுமைக்கும் இனிய
ராகவனே

மகனாக பிறந்து மண்ணிலே வாழ்ந்தவனே
அகத்தினுள் புகுந்து ஆணவம் அழிப்பவனே

தந்தை சொல்லை தட்டாத இராமனே
மந்திரமாய் ஏற்று மண்ணாசை விட்டவனே

பத்தினியை பிரிந்து பரிதவித்து
சென்றவனே
நித்திய சீலனாய் நேசித்து இருந்தவனே

அனுமனின் துணையோடு அலைகடல்
தாண்டியவனே
அனுமானிக்க முடியாத ஆற்றல்
உடையவனே

ஏழுபிறவிக்கும் இறைகாட்டும் ஏழுதிருக்
கோவிலே
வாழும் வழிகாட்டும் வைகறை தேசங்களே

நாற்புற தூணில் நற்திசை காட்டுமே
பார்போற்றும் கோவிலாய் பாதை காட்டுமே

எல்லைகள் இல்லாத எழில்திரு தேசமே
தொல்லைகள் இருந்தாலும் துணிவைத்
தந்திடுமே

எங்கும் நிறைந்த எழிலான இறையே
பொங்கும் அழகில் புவனம் நிறைபவனே

இரண்டு எழுத்தில் இனிமை தருபவனே
கரங்கள் கூப்பிட கண்ணுக்குள் வருபவனே

http://www.thandoraa.com/temple/jammu/

**திருவல்லவாழ் திருவாழ் மார்பன்** - **எர்ணாகுளம்**
108 திவ்ய தேசங்கள் 106

கோலமாய் கொலுவிருக்கும்
கோலப்பிரான் திருவுருவே
காலத்தைத் தாண்டிய கருநிறமேனி
திருவுருவே

திருவாழ் மார்பாய் திகழும் திருவுருவே
திருவல்லப நாயகன் திருவருள்
திருவுருவே

சங்கர மங்கலத்தம்மை சரணமென்ற
திருவுருவே
சங்கடம் தீர்த்திடும் சுதர்சன
திருவுருவே

ஏகாதசி விரதத்தின் ஏகாந்த திருவுருவே
ஆகாயம் அளந்த அற்புத திருவுருவே

தோலாகசுரன் அழித்த தொய்வில்லா
திருவுருவே
பாலாபிஷேகம் பெற்றிடும் பாலக
திருவுருவே

கண்டா கர்ணன் காதிலொலிக்கும்
திருவுருவே
கண்ணனாய் பிறந்த காருண்ய திருவுருவே

பொன்மணிகள் கீதம்பாடி போற்றிய
திருவுருவே
கிண்கிணி ஆடிட களிப்புட்டும் திருவுருவே

கருணையை சிந்திடும் கண்ணன்
திருவுருவே
அருளிட அஷ்டமியில் அவதரித்த
திருவுருவே

http://www.kamakoti.org/tamil/2divya178.htm

## திருப்பாற்கடல் - விண்ணுலகம்
108 திவ்ய தேசங்கள் -107

திருப்பாற்கடலில் பள்ளிகொண்ட
நாராயணா திருக்கோல அவதார நாரயணா
திருப்பாடல் வடிவிலே நாராயணா
தினம்வலம் வந்த நாராயணா

கடலிலே மீனாய் நாராயணா காட்சி
அளித்த நாராயணா
உடலை சுருக்கி நாராயணா உள்ளுக்குள்
அணுவான நாராயணா

மந்திர மலையுமன்று நாராயணா மத்தாக
மாறிய நாராயணா
தந்திர கூர்மமாய் நாராயணா தாங்கிய
அவதார நாராயணா

இரண்யாட்சன் கொடுத்த நாராயணா
இன்னலை களைந்த நாராயணா
வரங்கள் தந்த நாராயணா வராக அவதார
நாராயணா

சிம்மத்தின் வடிவில் நாராயணா சினந்து
எழுந்த நாராயணா
இம்மைக்கும் மறுமைக்கும் நாராயணா
இதங்கள் தருவாய் நாராயணா

வடிவத்தில் சிறுவனாய் நாராயணா வாமன
அவதார நாராயணா

அடியெடுத்து ஆகாயம் நாராயணா அளந்து
எழுந்த நாராயணா

தாயை வதம்செய்த நாராயணா தனயனாய்
பரசு நாராயணா
மாயைகள் செய்து நாராயணா மயக்கும்
நாயக நாராயணா

தந்தை சொல்காத்த நாராயணா தனயன்
ராம நாராயணா
தந்த சோகங்கள் நாராயணா தாங்கிய
சீமானே நாராயணா

பலங்கள் பெற்ற நாராயணா பலராம
வடிவமே நாராயணா
உலகை காத்த நாராயணா உத்தம புருஷ
நாராயணா

கண்ணனாய் வந்திங்கு நாராயணா கவர்ந்த
குழந்தையே நாராயணா
மண்ணைத் தின்று நாராயணா மாயங்கள்
புரிவாய் நாராயணா

கலியுகத்து அவதிநீக்க நாராயணா
கல்கியாய் வருவாய் நாராயணா
சலிப்பின்றி காக்கும் நாராயணா சங்கு
சக்கர நாராயணா

தசைகளை இயக்கும் நாராயணா தசாவதார
நாயகனே நாராயணா

அசையும் அசையா நாராயணா அகிலத்துப்
பொருளான நாராயணா

தேவர்கள் அமுதம் நாராயணா தேடிய
நேரத்தில் நாராயணா
தேவனாய் பாற்கடல் நாராயணா
திருமாலாய் சயனித்த நாராயணா

இந்திரன் கடைந்திட நாராயணா இயக்கிய
படைகளே நாராயணா
மந்திர மலையும் நாராயணா மத்தாக
கடைந்த நாராயணா

வாசுகி கயிறாக நாராயணா வளைந்த
அழகென்னே நாராயணா
வீசும் புயலும் நாராயணா வினையும்
செயலும் நாராயணா

கசிந்த விடத்தை நாராயணா கடலும்
தாங்குமோ நாராயணா
புசித்த சிவனும் நாராயணா புவனம் காத்த
நாராயணா

கணத்தில் நீலமான நாராயணா கண்டத்தில்
தாங்க நாராயணா
குணமான உன்னருமை நாராயணா குலம்
காக்கும் நாராயணா

மோகம்தரும் வடிவிலே நாராயணா
மோகினி உருவமே நாராயணா

யாகங்கள் வணங்கும் நாராயணா யாதவ
குலத்து நாராயணா

ஆணாகி பெண்ணான நாராயணா அகிலத்து
திருநங்கை நாராயணா
காணாத காட்சியாகி நாராயணா
கண்ணுக்குள் மறைந்த நாராயணா

அணுவாகி அண்டமாகி நாராயணா
அறிவியல் புதிரான நாராயணா
நுணுக்க அறிவாகி நாராயணா நூதன
தொழிலான நாராயணா

எண்ணமாகி என்னுள் நாராயணா
எழுத்தாகி பாடலான நாராயணா
எண்ணிக்கை இல்லாத நாராயணா
எண்ணிலடங்கா எழில் நாராயணா

எதிலும் அடங்காது நாராயணா
எதிலுமடங்கி மறையும் நாராயணா
பதிலாகி கேள்வியான நாராயணா பாரில்
பரந்துவிரிந்த நாராயணா

அன்னையாகி தந்தையாகி நாராயாணா
அன்பாகி அணைக்கும் நாராயணா
உண்மையாகி நிற்கும் நாராயணா உத்தம
சீலனே நாராயணா

ஒன்றாகி இரண்டாகி நாராயணா ஓங்கி
உலகளந்த நாராயணா

கன்றாகி பசுவாகி நாராயணா கண்கவர்
கண்ணனே நாராயணா

மூன்றடி மண்ணளந்த நாராயணா
முன்னின்று காக்கும் நாராயணா
தோன்றிய உருவத்தில் நாராயணா
துயர்கள் துடைக்கும் நாராயணா

நாற்கர ஆயுதம் நாராயணா நலம்தரும்
சத்தியம் நாராயணா
பாற்கடல் பெருமாள் நாராயணா பஞ்சபூத
பிரபஞ்ச நாராயணா

பெருகிய ஆறுகள் நாராயணா பேணிக்
காத்திடும் நாராயணா
கருத்தினில் ஏழுமலையான நாராயணா
கார்வண்ண மேனியனே நாராயணா

ஓம் நமோ நாராயணா ஓம் நமோ
நாராயணா ஓம் நமோ நாராயணா!

https://ta.m.wikipedia.org/wiki/திருப்பாற்கடல்

## பரமபதம் - வைகுண்டம்
108 திவ்ய தேசங்கள் -108

பிறந்த பயனை இன்று பெறுவேனே
சிறந்த தேசத்தை நின்று பாடுவேனே
குறை இல்லா நிறை கோவிந்தனே
பறை சாற்றி உன்புகழ் பாடுவேனே

செருக்கினை அழிக்கும் சிங்காரச் செம்மலே
கருத்தினைக் கவரும் கார்மேனி கண்ணனே
சறுக்கி ஏறிடும் சம்சார சாகரமே
வருத்தங்கள் யாவும் வருடாது விலகிடுமே

பரமபத விளையாட்டின் இறுதி நிலையே
அறங்கள் மிகுந்த அழிவில்லா நிலையே
கரங்கள் கூப்பியே கண்கள் மூடுமே
சிரம்தாழ உன்னை சிந்தை வணங்குமே

வாசுதேவன் வைகும் இடமான வைகுண்டமே
மாசுகள் இல்லாத மாறா பேரின்பமே
சத்திய ஜீவனுக்கு சாத்திய முக்தியே
நித்திய சூரியாய் நிம்மதி பெறுமே

நூற்றியெட்டுப் பாடல்களை நூலாய்க் கோத்திட
போற்றியுன் திருநாமம் புகழ்ந்து பாடிட
சாற்றிய பாமாலை சாராங்கனைச் சேருமே
காற்றினில் இரண்டற கலந்து செல்லுமே

https://ta.wikipedia.org/wiki/108_வைணவத்_திருத்தலங்கள்